உ

கணபதிதுணை.

உலோககுரு

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

சோதிடம் பன்னீராயிரத்தில்

# சகோதர பாவகம்.

GL. 54201
2001

இஃது,

எட்டயபுரம் சமஸ்தானம் மகாராஜ ராஜ ராஜஸ்ரீ

மகாராஜா அவர்கள்

கனிஷ்ட சகோதரர்

மகாராஜ ராஜஸ்ரீ

தங்கமகாராஜா அவர்கள்

பொருளுதவிகொண்டு,

---

சோதிடம்

M. சுப்பிரமணியபிள்ளையால்

சென்னை குனா:

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1913.

Registered Copy Right.

கோல்டன் பிரஸ், மதராஸ், என். சி.

எஸ். முத்தைய பிள்ளை, புஸ்தக ஷாப், புதுமண்டபம், மதுரை.



H. H. The Rajah of Ettaiyapuram.

உ

கணபதிதுணை.

# இந்நூலச்சிட்டவரின் கருத்து.

இந்த சர்ஸ்திரமானது ஆதியில் ஸ்ரீமத் சங்கராச்சாரிய
சுவாமிகளால் சொல்லியதென்று சொல்லுகிறார்கள். ஆனால்
நான் தெரிந்தவரை அவர்கள் தமிழிற் சொல்லியிருக்கமாட்டார்
களென்றும் ஒருவேளை சமஸ்கிரதத்திற் சொல்லியிருப்பார்க
ளென்றும் எண்ணுகிறேன். அதை அனுசரித்தோ அல்லது தன்
அபிப்பிராயம் போலவோ? வெகு காலத்துக்கு முன் தென்னாட்
டிலிருந்த யாரோ? ஒரு பெரியவராற் பாடியிருக்கலாமென
நினைக்கிறேன். ஆனால் இவர்போன போக்கு இப்பொழுது வழ
ங்குகிற "சோதிட சாஸ்திரத்தில்" ஒருவித சட்டத்தை யேற்
படுத்தி யிருக்குகிறார்களே தவிர அதின் சாட்சியத்தைப்பொறு
த்தும், லாவை அனுசரித்தும் பைசல் எழுதவேயில்லை, இவர்
அவ்விதமன்றி சாட்சியத்தை யனுசரித்துச் சட்டப்படி சரியா
னஜர்ஜிமெண்டு. ஐக்கோர்ட்டில் முடிவுசெய்ததைப்போல ஒவ்
வொரு பர்வகத்திற்கும் அவ்வவர்க்குரிய காரகம், இடம், பார்
வை, சம்பந்தம், ஐவகைப்பெல முதலியவைகளை நன்குணர்ந்து
திட்டமாக முடிவான பலன்களை எண்ணிக்கையுடனும் அதுகள்
கிடைக்குங் காலத்துடனும் சொல்லியிருக்கிறார்.

இதில் இப்போது பார்க்கிறவர்கள் ஜாதகங்களில் எந்தெந்
தக் கிரகங்களைச் சொல்லியிருக்கிறதோ! எந்தெந்தக் கிரகங்க
ளைச்சொல்லவில்லையோ! அவரவர்களுக்கு ஏற்பட்டபலன்களைக்
கூட்டியோ குறைத்தோ, கடவுளின்பத்தியின் பேரில் சொல்வா
ர்களாயின் பலன்கள் கொஞ்சங்கூடப் பிசகாது சரியாயிருக்கு
மென்று நான் உத்தேசிக்கிறேன்.

இங்ஙனம்,—

எம். சுப்பிரமணியபிள்ளை,

சோதிடம்-நடுவப்பட்டி

சாத்தூர் போஸ்ட்டு.

உ

பரமபதிதுணை.

உலோககுருவாகிய

# ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சங்கராச்சாரியம் பன்னீராயிரத்தில்

# சகோதர பாவகம்.

பாயிரம்.

## கடவுள் வணக்கம்.

விநாயகர்.

ஓதவினையகலு மோங்குபுகழ்பெருகுங்
காதற்பொருளனைத்துங் கைகூடுஞ்—சீதப்
பனிக்கோட்டுமாமலைமேற் பாரதப்போர்தீட்டுந்
தனிக்கோட்டு வாரணத்தின்றுள்.

சுப்பிரமணியர்.

குமரகுருபரனே குன்றெறிந்த வேலா
அமரர்சிறைமீட்டு மையனே—சமணர்
தனைக்கழுவிற் போட்ட சண்முகாயெந்தன்
மனக்கவலை தீர்த்தருளு வாய்.

சரஸ்பதி.

புத்தகமும்ஞானத்து முத்திரையும் பொற்பளிங்கும்
வைத்தகமண்டலமும் வன்னிகையும்—முத்து
வடங்கொண்ட பூணினுள் வந்தென்மனத்தே
யிடங்கொண்டாள் நீங்கிற்றிடர்.

## நூல்.

மாதிடப்பாகம்வைத்த வரனுமைக்கோர் காலத்திற்
காதிடத்துபதேசித்த கணிதநூற் சாரந்தன்னைச்
சோதிடச் சங்கராச்சாரி சொற்பனீராயிரத்தில்
ஓதிடப்பிறவிபாகத் துண்மையை யுரைசெய்வோமே.

## வேறு.

துணைவரிற்சுபரேநிற்கிற் றுணைவர்தன்றுனத்தோனும்
வினவியகுருதியாகி வியனுறப்பன்னொன்றுறிற்
கனமுடன்மாந்திகூடிற் கருதுமோராறினோனும்
வனிதைகேள்கேந்த்ரமேறில் மாதுமூன்றுபயமாணே. (௧)

## வேறு.

மூன்றினுக் குடையோன் பாவராயந்த மூன்றினிலிருந்திடப்பருதி, தோன்றிடத்துணைவர் யாவரும்நாசம் சொல்லலாங் குருவதிலெய்தில், என்றிடும்பெண்ணு மாணுமொவ்வொன்று யிருந்திடுஞ் சகோதரத்துன்பம், ஈன்றிடுமென்றே அறையலாமிந்த யிடத்தினிற் சனியிருந்தாலே. (௨)

மூன்றினுக்குடையோன் மாலவனாகி மூன்றினோன்கேந்திர முற்றால், தோன்றியவதனிற் பாவருஞ்சுபருஞ் சூழ்ந்திடமூன்றினில்மூன்றோன், ஊன்றிடம்சுபரா யிருந்திடத்தான முற்றவனவன்சகோதரர்கள், மான்விழிமாது மூன்றுடன்புருடர் வருவதுமுபயமென்றறையே. (௩)

## வேறு.

ஆரணங்கேதுணைவரின்கோளாரலாக
அவனுயிர்க்குமறையாக்கேந் திரமுற்றாலும்
பார்மூன்றில்மூன்றோனு மூன்றுங்கோட்குப்
பஞ்சமமேழொன்பானிற் பதிந்திட்டாலும்
நேரடிகள்மூன்றலது மூன்றிலாதல்
நேர்சுபர்களொருவர்தனித் திருப்பாராகிற்
பார்புகழ்மூன்றுணுடனே யுபயமாது
பலத்திடுமென்றறைந்திடுவாய் பாரில்மாதே. (௪)

பாவையரேயிக்கோட்க ளுடனேவேறு
பகைராகுகேதிவர்க ளொன்ருய்ச்சேரக்
காவடிகளிதிலொருசேய் குறையுமென்பர்
கடும்பாவர்பின்னுமதிற் சார்வாராகிற்
றீவரமாய்முன்போலே நீக்கிவாநீ
ஜெனனமதில்முன்னேர்கள் யாருற்ருலும்
பாவம்வருமென்றுலகில் நிற்காதேகிப்
பதியியமன்பாதமதிற் பணியுந்தானே. (௫)

வேறு.

மூன்றினுக்குடையோன் சென்மகேந்திரத்தில் முதுசுபர் கூடிடமூன்றில், ஊன்றியபாவ ரிருந்திடமூன்று முகந்தமுன்மாத ராய்த் தோன்றும், என்றிடும்புருட ரிரண்டெனத்தரிக்கு மினி யதோர் மூன்றினிற்சுபருந், தோன்றிடுமாகிற் ருெகுத்தவாறெட் டுத் துணைவர்வந்துறுமெனச் சொல்லே. (௬)

மூன்றினுக்குடையோன் மாலதாய்ப்பானுமுயங்கவப்பானு வின்றனக்கு, மூன்றினேன்மறைவி லாறினேன்சுபராய் முழங்கி டப்பாம்புடனிருக்கில், ஆன்றிடுமீரெட் டடன்சகோதரங்க ளம ர்ந்திடும் ஏகமாமாது, தோன்றிடுமல்லாற் சகலமுமழிவு தொடு த்திடுமிப்பலன் துணையே. (எ)

வேறு.

ஆதரவாய்த்துணைவரினிற் காரிசேர
அத்தானத்தோன்பருதி காலில்மாயக்
கோதறவேமூன்றினுக்கு மூன்ருங்கோளன்
கொடியதோர்பவராகிப் பாம்போடெய்தக்
காதலியேமேடதுலே கடகந்தோன்றிற்
கருதியலக்கினமதனிற் பாவர்சேரச்
சேதமிலாத்துணைவர்தன்னே டுபயமாகுஞ்
சேரலதுவுறில்மரணஞ் செப்புமானே. (அ)

புகருடனேவுயிர்தனக்குப் பன்னேனென்ருய்ப்
பொருந்திடக்கேந்திரமாகிப் பவர்வீடாகத்
தகரதிபன்சுபரில்லாச் சுபர்வீடாகிச்
சார்ந்திடவேமூன்றினுக்கோள் மறையாதானல்

சுகமொழியாய்தோன் றிடுஞ்சேய் துணைவர்மூன்று
சொல்லினர்பைந்தொடியாறு புரர்வந்தெய்தும்
புகரும்பன்னேனுடனே பவர்வந்துற்றாற்
பொன்றிடும்பெண்நாலெனவே துணைரெண்டோதே. (௯)

மாலோனும்உயிர்தனக்குப் பன்னேனென்றாய்
வருமிடங்கேந்திரமாகிச் சுபர்வீடாக
நீலனுடன்புகர்மூன்றா னோர்வீடாகி
நின்றிடவேசுபர்வீடாய் மறையாதாகில்
தூலமுடனாரனுமே கரிவீடானால்
தோன்றிடுஞ்சேய்துணைவரஞ்சு பெண்நாலாகும்
மாலோனும்பவர்வீடாய் மறையுமானால்
மாய்ந்திடுமேவருந்துணைவர் மகிதலத்தே. (௧0)

மதிமகனுமதியுடனே மூன்றானென்றாய்
வருமிடமேசுபர்வீடாய் மறையாதாகில்
விதியுடன்பன்னென்றானுஞ் சேயுமொன்றாய்
விளங்கிடவேபவர்வீடாய் மறையுமானால்
சதிருடன்தோன்றிடுஞ்சேய்க்குத் துணைவரொன்று
சார்ந்திடுமேபெலமாகத் தரணிதன்னில்
மதிமகன்வீடதனில்வரும் பொன்னன்மாந்தி
மறைந்திடவேவருந்துணைவர் மாயுமாதோ. (௧௧)

சூரியனுமதியுடனே மூன்றானென்றாய்த்
தோன்றிடுங்கேந்திரமாகிச் சுபர்வீடாகப்
பேரிடவேவுயிர்தனக்குப் பன்னேன்சேயும்
பெலத்திடவேசுபர்வீடாயுயிர்க்கீராறில்
சீருடன்தோன்றிடுஞ்சேய்க்கு வரும்பெண்ணஞ்சு
செப்பினர்தன்றுணையிருவ ருடன்வந்தெய்துஞ்
சூரியன்வீடதனில்வரும் குளிகனுற்றால்
துஞ்சிடும்பெண்ணஞ்செனவே துறக்குமாதோ. (௧௨)

புந்தியுடன்மூன்றின்கோ ளோர்வீடாகிப்
பொருந்துமிடம்சுபர்வீடாய் மறையாதாகில்
வந்துயிர்க்குப்பன்னேனுங் கரியோடொன்றாய்
மறைந்திடவேசுபர்வீடாய்ச் சுபர்நோக்குற்றால்

சிந்தையுடன்றோன்றிடுஞ்சேய் துணைவரஞ்சு
செப்பினர்பெண்ணஞ்செனவே தெரியநூலோர்
புந்தியுடன்மூன்றின்கோள் பவர்வீடானாற்
பொன்றிடுமேவுடன்வரினும் வருஞ்சேய்நாசம். (௧௩)

மறையோனும்பதினோராங் கோளதாக
வருமிடஞ்சேய்வீடில்லாப் பவர்கள்சேர
விறையுமதற்குடையோனு மதிமூன்றோனும்
விளங்குயிர்க்கீராறலது உபயமானால்
முறையுடன்றோன்றிடுஞ்சேய்க்குத் துணைநாலொன்று
மொழிந்தனர்பின் பைந்தொடிநாலுபயமோது
துறையுமந்தமறைதனையே பவர்நோக்குற்றாற்
றுஞ்சிடுமாண்நாலெனவே மாதுமூன்றே. (௧௪)

மாதேகேள்புந்தியுடன் மூன்றோன்சேயும்
மந்திரிபான்முதுமகனும் பன்னோன்றானும்
ஓதுமுயிர்தனக்காறிற் பவர்வீடாகி
உதவிமதிதனக்கேழின் மறையாதானால்
நீதியுடன்றோன்றிடுஞ்சேய் துணைவரேழு
நேசமெனக்கன்னியுடன் மூன்றாய்ச்செப்பு
வேதன்மொழிப்படியாகக் கணிதநூலோர்
விதித்தனர்சாதகற்குமிது விளம்பென்றாரே. (௧௫)

வேறு.

மந்தனும்பன்னோன்சேயும் வருமிடமறையாதாகில்
வந்துயிர்தனக்குமுன்னோன் வருமிடமதிவீடானால்
சிந்தையாய்த்துணைவரோதச் செப்பினரிருநாலாகும்
விந்தையாய்வரும்பெண்மூன்று விதித்தனர்தரணிமாதோ. (௧௬)

மாதவர்மொழிநூலாலே வகுத்தனர்கணிதமாய்ந்தோர்
வேதமாய்ப்பன்னோன்றானும் விரைவுடன்பவர்வீடுற்றால்
சேதமாந்துணையென்றோதச் செப்பினரிருமூன்றாகும்
ஓதினார்வரும்பெண்ரெண்டு உயிருடன்நாசங்காட்டும். (௧௭)

வேறு.

கரியுடனேபன்னோனுங் கொடியகோளும்
கருதிடமேபுகர்வீடாய்க் கலக்கவக்கோள்
சரியுடனேமதிவீடாய்த் தரிக்கப்பொன்னன்
சார்ந்திடமுமொன்றாகச் சேரப்பாம்பு

வருமுயிருக்கிரண்டாகி யுடன்சேயானல்
வந்திடுநால்மூன்றெனவே துணையென்றோது
விரிகுழல்மங்கையர்மூன்று உடன்வந்தெய்தும்
மேதினியிற்கணிதநூல் விளம்புமேலோர். (கஅ)

மேலவருஞ்சொல்லியதோர் பன்னேன்கேது
விளங்கிடவே அட்டமமால் மறையவக்கோள்
சீலமுடன்தோன்றியதோர் வரினுங்கோளன்
சேருமனைபலமாகி மறையுமானல்
தூலமுடன்வந்திடுமேழ் துணைபெண்மூன்றில்
துஞ்சிடுநாலொன்றுதுணை மாதுமூன்று
சாலவேமாயுமெனக் கணிதமாய்ந்தோர்
சாற்றினரிப்படிக்குத் தரணிமீதே. (ககூ)

வேறு

மதிமகனிலாபனென்றுய் வருமிடமால்வீடாக
விதியுடன்பன்னேன்வீட்டில் விளங்கிடக்கரிவந்துற்றல்
சதிருடன்மூன்றேன்சேயும் சாரிடமுயிர்க்காருகில்
துதியுடன்முன்பின்நாசந் தோன்றிடுந்துணைவரொன்றே. (உ0)

வேறு.

புந்தியுமேவுயிர்தனக்கு மூன்றேனுகிப்
பொருந்துமிலக்கனந்தனக்கு மறைந்தேஆட்சி
வந்திடவேஓர்பவர்க ளுடனென்ருகி
வரவவற்குயீராறிற் புகர்சேயானல்
சிந்தையுடன்மூன்றுதுணை மாதுநாலு
செப்பினர்களாகமநூல் வழியென்றோது
புந்திமனைதனிற்கடுங்கோள் வளருமானல்
பொன்றிடும்பெண்மூன்றுதுணை யுபயமேகம். (உக)

வேறு.

மறையவன்மூன்றேனுகி வருமுயிர்தனக்குலாபன்
விரைவுளதானந்தன்னில் விளங்கிடப்பன்னேன்நீசம்
முறையுடன்மூன்றேன்றன்னை முதுமகன்விழிநோக்குற்றல்
அறைதுணைபெண்களெல்லா மழியுமாண்வளருமொன்றே. (உஉ)

வேறு.

மதிமகனுங்குருவீடாய்த் தரிக்கவெள்ளி
  வந்திடவேசூரியனும் பதினொன்கோளும்
விதியுடனேஒன்றாகித் தனிக்கவக்கோள்
  விளங்கியகேதுடன்மூன்றோன் வளருகேந்த்ரஞ்
சதிருடனேசேயரவு உயிர்க்குநாலிற்
  சார்ந்திடவேமால்தனக்கு யீராறுற்றால்
பதிதனில்வந்தெய்திடுமே துணைபெண்நாசம்
  பகருமெனவாகமநூற் படியென்றோதே. (௨௩)

வேறு.

சூரியன்பன்னொன்றாகித் தோன்றிடமுயிர்க்குமூன்றாஞ்
சீருடன் தானமாகிச் சேர்ந்திடமூன்றோனீறிற்
காரிசேய்மதியொன்றாகிக் கருதிடமறையாதாகிற்
கூறினர்வளருஞ்சேய்க்குக் குறித்தனர் துணைவரோதே. (௨௪)

ஓதினருலகந்தன்னி லுரைத்தனர் துணைவர்மூன்றாம்
நீதமாயிருபெண்ணென்று நிகழ்த்தினர் கணிதநூலோர்
வேதமாய்மூன்றோன்வீட்டில் விளங்கிடக்கொடுங்கோள்வந்தால்
சேதமாந்துணைப்பெண்ணெல்லாஞ் செத்திடுந்தாணிமீதே. ()

வேறு.

சூரியன்மால்மூன்றின்கோள் சேய்பன்னொனும்
  தோன்றுமிக்கோளோர்மனையா யுயிர்க்குமூன்றாய்ச்
சீரியஅட்டமமாயீ ராறுபன்னொன்
  சேருமிந்தத்தானமதி லிவர்வந்துற்றால்
கூறினர்சேய்நால்துணைவர் மாதுமூன்று
  கொள்ளுமெனத்தோன்றியசே யுடன்வந்தெய்தும்
வீரியமாயோர்துணைவர் மாதுமூன்று
  விதித்தனரால்நாசமெனக் கணிதமோதே. (௨௬)

வேறு.

சூரியன்சேய்மால்மூன்றோன் தோன்றுமிக்கோளொன்றாகச்
சாரிடம்மூன்றாறெட்டுத் தானமாய்வளரவிக்கோள்
கூறியபன்னொனுச்சங் குறுகிடத்துணைநாலொன்று
சீருடனிரண்டுபெண்கள் செனித்திடும்நாசம்பெண்ணே. (௨௭)

வேறு.

மதியுடனேபன்னேன்னா லேழுபத்தில்
வந்திடவேபதினென்றில் வளரப்பாம்பு
சதிருடன்சேய்மூன்றிலக்கோள் கொடியோன்மாந்தி
சாருமிடமறையாமல் மதிக்குப்பன்னேன்
துதிபெறவேதானமதில் வளரவந்த
தோன்றியசேய்மூன்றுதுணை மாதுநாலு
விதியுடனேதோன்றியதோர் துணைமாதெல்லாம்
விதித்தனரால்நாசமெனக் கணிதமோதே. (உஅ)

மரலுடன்சேய்மூன்றினுக்கோ ளுயிர்பன்னேனும்
வளருமிக்கோள்மதிகேந்த்ர முயிர்க்கொன்பானுய்ச்
சீலமுடனதற்குடையோ னுட்சியுச்சம்
சேர்ந்திடவேதோன்றியசேய் துணைரெண்டொன்று
கோலவிழிமாதரும்நா லுடன்வந்தெய்துங்
குறுகியசேயவன்றனக்குக் கணிதவாய்மை
தூலமுளமநதுடன்நால் துணையிரண்டு
துஞ்சிடுந்தப்பாதெனவே தரணிமீதே. (உகூ)

வேறு.

மாந்திபன்னேனும்வருமனைபலமாய் வந்திடவதனின்கோள் மறையாய், சார்ந்துயிர்தனக்கு மூன்றினேன்சுபராய்ச் சாரிடங் கேந்திரம்வருமால், ஏந்தியகுருதி யிலாபக்கோடனக்கு யிருந் திடமறைந்திடுமாகில், சேர்ந்திடுந்துணைவர் நாசமாமாது செத்தி டுமோர்துணைமாதே. (௩0)

மந்தன்வீடதனில் வருமுயிர்மூன்றோன் மறைந்திடமந்த னும்புதனல், சிந்தையாய்முன்பின் சுபர்வரப்பின்னிற் சேர்ந்திட வோர்பவர்வருகச், சந்திரன்குருதி லாபக்கோளுடனே தரித்தி டப்பன்னெனன்வீடுற்றால், வந்திடுந்துணைப்பெண்நாசமாமெனவே வகுத்தனர் பெலமதாய்மாதே. (௩க)

வேறு.

சந்திரன்பன்னேனுடனே உபயந்தன்னிற்
றரித்திடவேஉபயதிபன் சாரவொன்ருய்
வந்துயிர்க்குமூன்றினுக்கோள் வளரவுச்சம்
வருமதிபன்நீசும்வரச் சுபர்களோடு

சிந்தையுடனுயிர்தனக்கு மூன்றின்மூன்றின்
சேரவேவொருபாவர் தரிக்குமாகில்
வந்திடுஞ்சேயவன்றனக்கு முன்பின்னாசம்
வரவவன்தானேகனென வழுத்தலாமே. (௩௨)

வேறு

சூரியன்மூன்றோனாகித் தோன்றிடமூன்றாறெட்டிற்
சாருயிர்தனக்குப்பன்னோன் சாரிடம்நீசமெய்திச்
சீருடன்செம்பாம்பொன்றாய்ச் சேர்ந்திடப்பிறந்தசேய்க்குக்
கூறினர்துணைபெண்நாசம் குறித்தனரேகஞ்செப்பே. (௩௩)

வேறு.

நீலனுமூன்றோனாகி யாட்சியுச்சம்
நின்றிடவேவுடனெவர்கள் தரியாதாக
மாலவனுமுயிர்தனக்குப் பதினொன்கோளாய்
வளருமிடமதிபனுட யில்லமாகச்
சீலமுடனதற்குடையோன் பவர்களோடு
சேரிடம்ரெண்டாறெட்டுப் பதினொன்றானால்
சாலவேவுடன்வரினுந் துணைவர்மாது
சாய்ந்திடுமேதனக்குமுந்தி மரணங்காட்டும். (௩௪)

சூரியன்தன்னுடன்சுபர்கள் பன்னோன்றன்னில்
தோன்றப்பன்னோராங்கோள் தோன்றுமில்லஞ்
சாருயிர்க்கஞ்சொன்பதுவாய்த் தனிக்கமூன்றோன்
சற்குருவீடதில்வளரப் பவர்கள்சேரப்
பாருயிர்க்குமூன்றதுவே சுத்தமாயப்
பதியவர்க்குமூன்றதனிற் பவர்வந்துற்றால்
கூறியசேயுடன்வரினுந் துணைப்பெண்ணெல்லாங்
குறுகிடுமேதனக்குமுந்தி யழியுமாதே. (௩௫)

சங்கனும்மேமூன்றோனாய் நாலதாகித்
தோன்றிடவேவுடன்மறைசேய் மாந்திசேரச்
சந்தையுடனுயிர்தனக்குப் பன்னோன்கோளன்
சாரிடங்கேந்திரம்வளர முன்பின்பாம்பு

தங்கிடவேவுயிர்தனக்கு மூன்றுபன்னேன்
தானமதிற்பாவருமே தரிக்குமாகில்
துங்கமுடன்தோன்றியதோர் துணைவர்மாது
துஞ்சிடுமேதனக்குமுந்தி நாசம்செப்பே. (௯௬)

மாலவனுமுயிர்தனக்கு மூன்றோனுகி
வளருமிடமூன்றெட்டுத் தானஞ்சேரச்
சீலமுடன்பதினென்றி லரவுதிங்கள்
சேர்ந்திடப்பன்னோராங்கோள் சேருமில்லம்
மாலவன்வீடலதுபரி வீடேயேகி
வரும்பவர்களுடனெவர்கள் தனிக்குமானல்
தூலமுடன்றனக்குமுந்தி துணைவர்மாது
துஞ்சிடுமேஓர்துணைவர் பெலமென்றோதே. (௯எ)

மந்தனுமூன்றோனுகி வளருமில்லம்
மதிமகன்வீடலதுபரி வீட்டிலேக
வந்துயிர்க்குப்பன்னேன்கோள் சுபராகி
வருமிடங்கேந்திரம்வளரத் தனிக்குமாகில்
விந்தையுடனுயிர்தனக்கு மூன்றுபன்னேன்
விளங்குமனேசுத்தமதாய் வரினுமானல்
முந்தியசேயுடன்வளராண் துணைவரொன்று
மொழிந்தனர்மாதிருமூன்று உடன்வந்தெய்தும். (௯அ)

எய்துமெனத்தோன்றியசேய் தனக்குமேலோர்
இசைகணிதவகைகடெரிந் துரைக்கலானர்
மெய்யுயிர்க்குலாபக்கோ ளுடனெக்கோட்கள்
விளங்கிடவேசுபரா கி மறையாதானல்
மொய்குழலாயிருமூன்று துணைவரஞ்சு
மொழிந்தனர்களேகமுடன் நாசங்காட்டும்
பையரவுபன்னேன்கோ ளுடன்வந்துற்ருல்
பார்விளங்குஞ்சேய்துணைமா தொழியுமுந்தி. (௯௯)

சுக்கிரனும்பன்னேன்கோ ளாகிச்சொந்தந்
தோன்றுமனேதனில்வளரச் சுபர்கள்நோக்கா
மிக்கதெனவுயிர்தனக்கு மூன்றோனேடு
வெய்யவனுந்தேர்ப்பாகன் விளங்குமில்லம்

தொக்குமிலக்கனந்தனக்கு மூன்றுறெட்டு
தோன்றிருவோர்தானமதில் நிற்குமானுல்
மைக்கருங்கண்விழியணங்கே வுடன்வந்தெய்தும்
மாதர்துணைநாசமென மரணமுந்தி. (௪௦)

சூரியன்மூன்றுடையோனைப் பன்னேன்கோளுந்
தோன்றியமாவரவுடனே யிவர்களொன்றுய்ப்
பாருயிர்க்குமூன்றலது யீராறெட்டிற்
பகருமித்தானத்தில்வரச் சுபர்நோக்கில்லா
கூறியசேயவன்றனக்குத் துணைவர்சுத்தம்
குறித்தனர்களேகமென வளருமென்றே
சீருடனேமூன்றுங்கோ ளரவுமால்சேய்
சேருமிக்கோளுயிர்தனக்கு உபயஞ்சேர. (௪௧)

சேருமெனவுபயரெட்டி யிரட்டியாண்தான்
செப்பினர்கள்மாதிருமூன் றுகுமென்றே
கூறுமெனவுயிர்தனக்கு மூன்றுசுத்தம்
குறுகுதற்குமூன்றதனிற் கொடியோன்வந்தால்
சிருடனுண்நாலெனவே மாதிரண்டு
சேதம்வருமிதுதவறு தெனவென்றேதி
ஆரியன்மேலாணையெனக் கணிதநூலை
ஆய்ந்தோர்களறைந்தனர்க ளவனிமீதே. (௪௨)

மாலுயிர்க்குமூன்றேனுய் மறையோனில்லம்
வரவவர்தன்னுடன்புகர்சே யிவர்கள்சேரச்
சீலமுடன்மாலிருந்தோ னிலாபந்தன்னிற்
சேர்ந்திடவேபன்னேன்கோள் பரிவீடுற்றுல்
கோலவிழிமாதுபய மிரட்டியாகுங்
குறித்தனர்கள்வருந்துணைவ ருபயமேகம்
தூலமுடன்தோன்றியசேய் தனக்குமுந்தி
துஞ்சிடும்பெண்நாலெனவே துணையிரண்டே. (௪௩)

மதிமகன்மூன்றுடையோனுய் மறைந்துநீசம்
வந்திடவேவுடனெருகோள் சுபரேயாகச்
சதிருடன்மூன்றும்வீடு சுத்தமாகச்
சாருமந்தவீட்டினுக்கு மூன்றின்கோளன்

விதியுடனேவுயிர்தனக்கு லாபந்தன்னில்
விளங்கிடவேஅதற்குடையோன் மறையாதானல்
அதிபதியாயோர்துணைவ ருடன்வந்தெய்தும்
ஆகமசாஸ்திரப்படியே பெலமென்றேதே. (௪௪)

மூன்றுடையோன்மறையவனு யேகுமில்லம்
மூன்றலதுநாலலது ஏழிலாகத்
தோன்றுயிர்க்குப்பன்னேன்கோள் பவராதாகித்
தொல்புகர்மாலுடனுயிர்க்குமறையாதானல்
மூன்றுதுணையுடன்வரினு மாதுநாலு
மொழிந்தனர்களிதுதவரு தெனவென்றேது
தோன்றுயிர்க்குமூன்றுசுத்தம் லாபங்கேது
துஞ்சிடுமேமாதுதுணை தனக்குமுந்தி. (௪௫)

மந்தனுமூன்றுங்கோளாய்ப் பன்னேன்கோளும்
வருமிவர்களுயிர்தனக்கு மூன்றுறெட்டில்
வந்திடவேமிவர்களுக்கு முன்பின்பாவர்
வாய்த்திடவேதோன்றினபெண் தனக்குமேலோர்
விந்தையாயுடன்வரினுந் துணைவர்நாலு
விளங்கியபெண்ணுபயமொன்று வரினுமாகும்
சிந்தையுடன்மூன்றுசுத்தம் லாபஞ்சுத்தம்
சேதமெனவிரண்டுதுணை மாதுமூன்றே. (௪௬)

மறைவுயிர்க்குமூன்றேனும் நீசமேறி
வந்திடவேவுடனெருகோள் பவர்கள்சேர
விரைவுடனேவுயிர்தனக்குப் பதினோராங்கோள்
விளங்குயிர்க்காறெட்டுப்பன் னிரண்டிலேகி
முறையுமவருடன்மதிமா லலரிசேர்ந்தால்
மொழிந்திடுஞ்சேயவன்றனக்குத் துணைவர்மாது
உறையுமென்றுரரவாலே அழியுமென்று
ஓதினர்கள்கணிதமொழிப் படியாய்மேலோர். (௪௭)

சந்திரனுமுயிர்தனக்குப் பதினோராங்கோள்
சாருயிர்க்குக்கேந்திரமாய் மறையோன்வீடாய்
வந்திடவேஅதற்குடையோ னுயிர்க்குமூன்றில்
வாய்த்திடவுமுடன்கொடியோன் வளரமூன்றேன்

விந்தையுடன்மறைந்திடவே வரினுஞ்சேய்க்கு
விளங்குமெனவுடன்வரினுந் துணைமாதெல்லாஞ்
சிந்தையுடன்நாசமெனத் தனக்குமுந்தும்
செப்பினர்களிது தவறு தெனவென்றேதே. (சஅ)

மாந்தியரவுடனுயிர்க்கு லாபந்தன்னில்
வந்திடவேபன்னேன்கோள் மறைமால்பானுஞ்
சார்ந்திடமுமேழொன்பான் மூன்றதாகித்
தரித்திடவேசுபர்பவர்கள் நோக்காதாகில்
ஆர்ந்துயிர்க்குமூன்றுங்கோள் மறையன்வீட்டி
லமர்ந்திடவேதோன்றியசேய் துணைவரொன்று
சேர்ந்திடும்பெண்ணிரண்டெனவே தரணிமீது
செப்பியபெண்நாசமெனத் துணைவர்மோசம். (சக)

மூன்றுடையோன்வரும்புகராய்ப் பன்னேன்கோளும்
மூன்றலது ஆறலது எட்டிலேகப்
போன்றுயிர்க்குப்பதினோரா மில்லந்தன்னிற்
பொன்னனிருந்திடக்குருதி தரிக்குமானல்
மூன்றுடனேவருந்துணைவர் மாதுமூன்று
மொழிந்தனர்களுடன்வரினுங் கணிதமாகத்
தோன்றுயிர்க்குமூன்றதிலே பவர்வந்துற்றால்
துஞ்சிடுமேவுபய துணை மாதிரண்டே. (ருo)

மாந்தியுடன்வருங்குருதி பதினொன்றேகி
வந்திடவேலாபக்கோ ளுயிர்க்குமூன்றிற்
சார்ந்திடவேமூன்றுங்கோள் புகரதாகிச்
சந்திரன்பாம்புடன்கூடி மறையாதானல்
வாய்ந்திடுஞ்சேயவன்றனக்குத் துணைவர்மாது
வகுத்தனர்கள்நாசமெனக் கணிதமாகத்
தோய்ந்திடுமேயேகமெனத் தனிப்பானென்று
சொல்லினர்கள்சோதிடநூ லாய்ந்தமேலோர். (ருக)

வேறு.

சூரியன்மூன்றேனென்றாய்த் தோன்றிடவுயிர்க்கீராறிற்
சாரிடஞ்சுபர்வீடாகித் தரித்திடவக்கோள்தானும்

சீருடனுதயமேறிச் சேர்ந்திடமால்சேயுற்றால்
கூறினர் துணைவர்சுத்தங் குறித்தனர்வரும்பெண்செப்பே. (ருஉ)

செப்பிடும்பெண்ணிரண்டாய்ச் சேர்ந்திடுங்கணிதமாகத்
தப்பிடாதெனவேமூன்றிற் றனித்திடக்குளிகன்வந்தால்
இப்படிப்பிறக்குஞ்சேய்க்கு இசைத்தனர்வரும்பெண்நாசம்
துப்பிதழாய்கேள்மூன்றோன் தோன்றிடவுதயம்வந்தால். (ருங)

வேறு.

மதியுடனேவுயிர்தனக்குப் பன்னொன்றானும்
வருமிடங்கேந்திரமாகிச் சுபர்வீடாகச்
சதியுடனேவுயிர்தனக்கு மூன்றோன்சேயுஞ்
சாருமனேசுபமாகிச் சுபர்வந்துற்றால்
விதியுடன்தோன்றிடுஞ்சேய்க்குத் துணைநாலொன்று
விதித்தனர்பெண்ணுடன்வரினு மிருநாலொன்று
மதியுடன்பன்னோனுமொன்றாய் மறையுமாகில்
மாய்ந்திடும்பெண்ணெனத்துணைவர் மூன்றாய்ச்செப்பே

வேறு.

குருதியுஞ்சசிபன்னோனுங் குறுகிடமறையாதாகில்
வருமுயிர்தனக்குமூன்றோன் வருமிடஞ்சுபர்வீடுற்றால்
சுருதியாய்த்தோன்றுஞ்சேய்க்குத் துணிவுடன்துணைவர்மூன்று
கருதியமாதுமூன்றே கருத்துடனுடன்வந்தெய்தும். (ருரு)

சூரியன்கரிமால்மூன்றோன் சுக்கிரன்மறைபோடொன்றாய்ச்
சாரிடஞ்சுபர்வீடாகித் தரித்திடச்சுபர்நோக்கில்லாச்
சீருடன்பன்னோன்சேயுஞ் சேரிடம்மறையாதானாற்
கூறினரிருநாலொன்று குறித்தனர்தரணிமாதே. (ருசு)

மாதவர்மொழியால்மங்கை வருவதுவையமீது
வேதனுமிருமூன்றென்று விதித்தனர்கெணிதமாய்ந்தோர்
ஓதுயிர்தனக்குமேபன் னொன்றினிற்குளிகன்வந்தால்
சேதமாந்துணைமூன்றாகச் செப்பினரஞ்சுபெண்ணே. (ருஎ)

குருதியுமூன்றோன்கேதுங் குறுகிடமறையாதாகில்
வருமுயிர்தனக்குமேபன் னொன்றினிற்பவர்வந்துற்றால்

சுருதியுமுணர்ந்தமேலோர் சொல்லுவர்துணையாறென்று
கருதியேவரும்பெண்ணைந்து கருத்துடன்வளருமாதே. (ருஅ)

மாதவர்மொழியாற்செப்ப வகுத்தனர்கணிதமாய்ந்தோர்
போதவேஅரவுமாந்தி பொருந்துமில்லுயிர்க்குமூன்றாய்
சீதமார்சுபர்வீடாகிச் சிறந்திடத்தோன்றுஞ்சேய்க்குச்
சேதமாந்துணைப்பெண்ணெல்லாஞ் செத்திடுந்தரணிமீதே. ()

மதிமகன்மூன்றின்கோளும் வருமிடங்கரிவீடேக
விதியுடனுயிர்க்குப்பன்னேன் விளங்குகேந்திரமேயாகச்
சதிருடனுதயந்தன்னிற் றனித்திடச்சேய்வந்துற்றாற்
பதிதனில்வளருஞ்சேய்க்குப் பகர்ந்தனர்துணைவர்மாயும். (சூ0)

மாயுமென்றுரைத்தார்மேலோர் வரும்பரிவுயிர்க்குமூன்றில்
தீயதாய்த்தனிக்குமாகிற் செப்பினர்மங்கையொன்று
தூயதாய்விதவையாகித் தோன்றிடும்பெலமதாகச்
சேயுடன்கரிமால்சுங்கன் சேருமோரில்லம்வந்தால். (சூக)

வந்திடுமிக்கோள்தானும் வருமிடமுயிர்க்குமூன்றாய்
விந்தையாய்ப்பன்னொன்றெட்டு விளங்கியதானந்தன்னிற்
சிந்தையாய்ச்சுபர்நோக்கில்லா திருந்திடப்பிறந்தசேய்க்கு
வந்திடுந்துணைவர்சுத்தம் வகுத்தனர்தரணிமீதே. (சூஉ)

வேறு.

மூன்றுடையோன்பவர்சுபராய்ப் பரிமாலோடு
முயங்கிடவுங்கேந்திரமாய்த் தரிக்குமாகில்
ஆன்றுயிர்க்குலாபக்கோள் மறையோனாகி
அமரப்பாம்புடன்கூடி யுதயஞ்சேர்ந்தால்
மூன்றுடனேயேகமெனத் துணைவர்தோன்றும்
மொழிந்தனர்பெண்யேகமென வுடன்வந்தெய்தும்
தோன்றுதயந்தனக்குமூன் றிந்துமாந்தி
தோன்றிடவேமூன்றுதுணை தொலையுமாதே. (சூங)

மறையோனுமுயிர்தனக்கு மூன்றோனாகி
வருமுயிர்க்குப்பதினொன்றிற் றனிக்கவக்கோள்
விரைவுடனேவுயிர்தனக்கு மூன்றுறெட்டில்
விளங்கிடவேவுடனெவர்கள் தரியாதானால்

முறையுடன்வந்திடுஞ்சேய்க்குத் துணைவரஞ்சு
மொழிந்தனர்மாதுடன்மூன்றே வுடன்வந்தெய்தும்
மறையுடனேகொடும்பவர்கள் தனிக்குமானால்
மாய்ந்திடுமோண்மூன்றுடனே மாதிரண்டே. (௬௪)

வேறு.

மதிமகன்வீட்டிற்பாம்பு மாந்தியுமதனிற்சேர்ந்தே
விதியுடனென்பான் றன்னில் விளங்கிடக்குருதியானால்
சதிருடன்பிறக்குஞ்சேய்க்குச் சாரிருதுணைவர்நாசம்
அதிகமாமிளையகன்னி யமர்ந்திடுந்தரணிமீதே. (௬௫)

குருதியும்புகர்வீடேகக் குளிர்மதிவீட்டிற்பாம்பு
சுருதியாய்த்தனிக்கவக்கோள் தோன்றிடநீலனோடு
வரும்ரவியதனிற்சேர்ந்தால் வருந்துணையிரண்டேயாகும்
கருதியமாதுமூன்றாய்க் கருத்துடனுதயங்காட்டும். (௬௬)

குருதியும்பதினொன்றேனுங் குளிர்மதியுடனொன்றாகிப்
பருதிமால்புகர்வீடானாற் பகரலாந்துணைவர்நாசங்
கருதிநல்லிறைவனுறிற் கதித்துமோரில்லமானால்
வருவதுகன்னியொன்றாய் வகுத்தனர்கணிதநூலோர். (௬௭)

வேறு.

மாலவன்குருதி மிறையவன்புகரும் வருந்துணைத்தானம்வந்திடுகில், சாலவேகாரி யம்புலியுடனே சாரிடம்பாவர்களில்லம், தூலமாய்ப்பிறக்குஞ் சேயுடன்துணைவர் தொகுத்தனரொன்றுமஞ்சதனால், மாலவன்குருதி யிறையவன்புகரும் வருமுயிர்க்கேழினில்வருமால். (௬௮)

வருந்துணைத்தானஞ் சுத்தமெய்திடலால் வருந்துணையொன்றிரண்டாகும், பொருந்திடுஞ்சுபர்கள் பாவரும்நோக்கப் பொற்புடன் பிறந்திடுஞ்சேய்க்கு, வருந்துணையொன்று வகுத்தனர் மேலோர் மாந்தியு மரவம்வந்திடுகில், இருந்திடும்பவராற் சுபமிலாதாகி லிரண்டுபெண் ணுண்டெனவியம்பே. (௬௯)

குருவுஞ்சேய்மதியு முயிர்தனக்கேழிற் குறுகிடக்கும்பவர் வரினும், வருமுயிர்தனக்கு மூன்றினேன்கிரகம் வரும்பவர்சுப

ரிலாதிடுகில், கருதியேயுதிக்குஞ் சாதகன்றுணைவர் கருமனுமிவ
ன்பினும்நாசம், குருவுசேயரவ மேழினில்வருமால்கொடுத்திடுந்
துணைவர்கள்மூன்றும். (எ0)

வேறு.

குருதியுமூன்றினேனுங் குருவுடன்பவர்வீடாக
வருதியாய்த்துணைவரில்லம் வளமுடன்சுத்தமெய்தக்
க்ருதியேயுதிக்குஞ்சேய்க்குக் கருத்துடன்துணைவர்சுத்தம்
பருதிபோற்கன்னியொன்று பகர்ந்தனருடன்வந்தெய்தும்.(எக)

வேறு.

இறையவன்மதியு மரவமுமொன்று யிருந்தது பாவர்வீ
டாக, முறைவுயிர்த்துணைவன் வீடதிற்சுபர்கள் முன்பினும்பா
வர்களிருக்க, மறையவன்றனக்குப் பாக்கியம்நாலில் மால்குரு
பூமன்வந் துதித்தால், விரைவுடனென்று வருந்துணையென்று
மேலவர்கணிதநூன் மொழியே. (எஉ)

குருதிமால்புகருங் குருவுங்கேதுடனே கூடியோரில்லம்வந்
திடினும், சுருதியாய்த்துணைவர் தானமேசுத்தந் தோன்றிடப்
பிறந்திடுஞ்சேய்க்குக், கருதியதுணைவர் நாலுமஞ்சாகக் கருத்து
டன்வருமென மொழிந்தார், குருதிமால்புகருங் குருவுமேமறை
ந்தாற் கொன்றிடுந் துணைவரென்றே. (எங)

வேறு.

பருதியுமாரலோடு பார்க்கவனில்லஞ்சேரச்
சுருதியாய்மூன்றின்கோளன் துணிவுடன்கொடுங்கோளோடு
வரும்முயிர்தனக்கோரேழில் வந்திடச்சுபர்வீடானல்
கருதியேயுதிக்குஞ்சேய்க்குக் கருத்துடன்துணைவர்மூன்றும். ()

மூன்றுடன்துணைவர்தாமும் மொழிந்தனர்கன்னிரண்டாய்
யீன்றிடுந்துணைவர்நாச மென்றனர்கணிதநூலோர்
ஏன்றதாய்ப்பதினென்றேனு மிறையவனேடுசேர்ந்தால்
தோன்றியமாதிரண்டு துணிவுடன்பெலமதாகும். (எரு)

குருதியுமூன்றினேனுங் குருவுமேகரிவீடானல்
வருமுயிர்தனக்கோரஞ்சில் மதிமகன்பாம்போடுற்றால்

கருதியேபிறக்குஞ்சேய்க்குக் கருத்துடன் துணைவரஞ்சாம்
சுருதியாய்க்கன்னிரண்டாய்த் துணிவுடன்பிறக்குமாதே. (எசு)

குருதியுமூன்றிரேனுங் குருவுநோய்முகனுமொன்றாய்
வருமிலக்கினத்துக்காறில் வந்திடக்குளிகன்றானுஞ்
சுருதியாயுயிர்க்குமூன்றிற் றுணிவுடன்தனிப்பானாகில்
வருவதுதுணைவர்நாசம் வகுத்தனர்யேகமாகும். (எஎ)

வேறு.

குருதியுமூன்றேன் காரிவீடதனிற் குறுகிடமுன்பினுஞ் சுத்தம், கருதியேமதியு முச்சவீடதனிற் கதித்துமேதனித்திடு மானால், வருமுயிர்தனக்குச் சோதரமொன்று வகுந்தனர்மாதிரண்டுடனே, உறுதியாய்வந்த சோதரத்துன்ப முரைத்தனர் கன்னியர்நாசம். (எஅ)

வேறு.

குருவுடன்மூன்றிரேனுங் கொடியவனுடனேகூடி
வருமிலக்கினத்துக்காறில் வந்திடச்சுபர்வீடாகச்
சுருதியாய்மதியுஞ்சேயுந் துணிவுடன்மறையாதாகில்
பெருமுயிர்த்துணைவரொன்று பேசினர்கன்னியஞ்சாய். (எசு)

குருதியும்புகர்விடேகக் குளிகனுங்குருவீடாக
வருமிலக்கினத்திற்பொன்னன் வந்திடப்பவர்வீடுற்றால்
சுருதியாயுதிக்குஞ்சேய்க்குத் துணிவுடன்துணைவர்மூன்று
உறுதியாய்க்கன்னியொன்று யுதித்திடுந்தரணிமீதே. (அ0)

மாதவர்மொழியென்றோத வருந்துணைதானுஞ்சுத்தம்
வேதமாயிருப்பதானல் விரைவுடன்பிறந்தசேய்க்குச்
சேதமென்றுரையிரண்டு செப்பினர்துணைவராகும்
போதவேகன்னியொன்று பொன்றிடுந்தரணிமாதே. (அக)

குருதியுமூன்றிரேனுங் குளிர்மதியுடனென்றாகி
வருமிலக்கினத்துக்கெட்டில் வந்திடச்சுபர்வீடாகக்
கருதியகுருவுங்கேதுங் கலந்துமோரில்லமானால்
பெருகுநற்றுணைவரஞ்சு பெண்சகோதரியுமாறே. (அஉ)

வேறு.

மந்தனுமாலோ டேகியெவ்வீட்டில் வந்திடமூன்றின்கோளுடனே, விந்தையாய்ச்சசிவீ டாகியேகுருவும் விளங்கிடமறைந்திடாதாகில், வந்திடுஞ்சேய்க்குத் துணைவரைந்தாக வகுத்தனர் கன்னிமூன்றுடனே, சிந்தையாய்த்துணைவ ரிரண்டுதான் நாசஞ் சேதமுங்கன்னியொன்றாமே. (௮௩)

கரியவனருணன் மூன்றினேனுடனே கலைமறைசுக்கிரன்வீடால், சரியுடன்பருதி சுபருடன்கூடிச் சாரிடங்கேந்திரத் துறுமால், வருமுயிர்சேய்க்குத் துணைவரஞ்சாக வகுத்தனர்கன்னி நாலுடனே, குறுகிடத்துணைவர் துஞ்சிடுமதனிற் குறித்தனர் கன்னிமூன்றொழியும். (௮௪)

முதுமகன்மாலோன் மூன்றினேனுடனே மூன்றுமாறெட்டினில்வருமால், சதிருடன்மாலோன் சுபருடனென்றாய்ச் சாரிடஞ்சுபர்மனைமறையால், விதியுடன்பிறக்குஞ் சோதரமைந்தாய் விதித்தனர் கன்னிநாலுடனே, பதிதனில்வருமால் துணைவர்கள் நாசம் பகர்ந்தனரொழியுமேகன்னி. (௮௫)

பருதிமால்குருசேய் சுபர்கள்வீடதனிற் பதிந்திடச்சுபர்கள்நோக்கிடுமால், கருதியேமூன்றோன் சுபர்களோடேகிக் கணக்கன்வீ டதனிலேமறையச், சுருதியாய்ப்பிறக்குஞ் சாதகன்றனக்குத் தோன்றிடுந் துணைவரைந்துடனே, உறுதியாமென்று கணிதநூல்விதியா லோதினர் பெரியவர்மொழியால். (௮௬)

மதிமகன்குருவு மூன்றின்கோளுடனே வருமிடங்கேந்திரத் துறுமால், விதியுடன்குருதி வளருகேந்திரத்தில் மேவிடச்சுபர் மனைவருமால், சதியுடன்பிறக்குஞ் சாதகன்றனக்குச் சாற்றினர் துணைவரொன்றாகும், அதிகமாங்கன்னி நாலுடன்வருமா லமர்ந்திடக் கன்னிரண்டொழியும். (௮௭)

குருவுமால்மூன்றோ னுயிரின்கோளுடனே குறுகிடக்கேந்திரத்துறுமால், வருமிலக்கினத்துக் கேழினிற்குருதி வந்திடச் சுபர்கள் நோக்கிடுமோம், சுருதியாயுதிக்குஞ் சாதகன்றனக்குத் துணிவுடன் துணைவரொன்றாகும், கருதியகன்னி யஞ்சதிற்கழிவு கன்னியுமூன்றுதானொழியும். (௮௮)

வேறு.

சூரியன்மால்பொன்னுடனே வுயிர்க்குநாலிற்
றேன்றிடவேமூன்றின்கோள் சுபர்வீடாக
வீரியமாயுயிர்க்கேழிற் குருதிமேவ
விளங்குமிக்கோள் தனைப்பாவர் விழியால்நோக்கப்
பாருலகில்வருசேய்க்குத் துணைவரொன்று
பகர்ந்தனர்கள் கன்னியஞ்சு கொடுக்குமேனும்
நாரியரில்வருசேய்க்கு வுடன்வந்தெய்தும்
நாசமெனவிரண்டுடனே நாடிச்சொல்லே. (அகூ)

பீதகன்மால்மூன்றினுக்கோ ளோர்வீடாகிப்
பின்னுமுன்னுஞ்சுத்தமதாய்ச் சுபர்வீடாக
ஓதிடுஞ்சேய்பொன்னவன்றன் வீடதானல்
உயிர்கடுங்கோள்முன்பின்னு முடன்வந்தெய்தச்
சாதகன்றன் துணைவரைந்து கன்னிரண்டு
சாற்றினர்கள் கன்னியொன்று துணைவர்மூன்று
சேதமெனத்தெரிந்துரைத்தார் கணிதநூலோர்
திறமுடனேயிப்பலனைத் தெரிந்துசெப்பே. (கூ0)

புந்திபரிபொன்னுடனே வுயிர்க்குநாலிற்
பொருந்திடவேசுபர்வீடாய்ச் சுபர்நோக்காலும்
வந்துதயந்தனக்கேழிற் குருதிமேவ
வரவவற்குமுன்பின்னும் பவர்வீடானல்
விந்தையெனவருஞ்சேய்க்குத் துணைவரொன்று
விதித்தனர்கள்கன்னியைந்து வுடன்வந்தெய்தும்
சிந்தையுடன்தனைப்பாவர் சேயைநோக்கச்
சேதமெனக்கன்னிரண்டு செப்புமாதே. (கூக)

மாதேகேள்பெண்ணிரண்டு சேதமாக
வகுத்தனர்கள்வெகுதிறமாய்க் கணிதநூலோர்
கோதேகேள்பூமனுடன் கடுங்கோள்வந்தாற்
கொன்றிடுமேமூன்றுகன்னி பொருந்திடாதே
வேதமொழியிதுவெனவே யுரைத்தார்மேலோர்
விளங்குமுக்கோள் தனைச்சுபர்கள் நோக்காதானல்
நீதமாய்ப்பவர்வரினுங் கன்னியைந்து
நின்றிடுமேயிவ்வண்ணம் நிலையென்றேதே. (கூஉ)

வேறு.

குருதியுமால்வீடேகக் குளிகனுமதனிற்சேரப்
பருதியும்புகர்மால்கேது பகரிடஞ்சுபர்வீடானல்
கருதியேயுதிக்குஞ்சேய்க்குக் கருத்துடன் துணைவரைந்து
உறுதியாய்க்கன்னிநாலா யுடன்வரவுதிக்குமாதே. (கூங)

வேறு.

மாலுடனேமூன்றினுக்கோள் பதினொன்கோளும்
மந்திரிபானுடன்கூடி யுதயந்தன்னிற்
சீலமுடனுயிர்தனக்கு முன்பின்னாறிற்
சேர்ந்திடவேசேய்துணைவ ரிரண்டொன்றாகும்
கோலவிழிப்பெண்ணேகே ளிரண்டுமங்கை
குறித்தனர்களாகமநூற் கணிதமாகத்
தூலமுடன்கேதுகரி யுயிர்க்குமூன்றிற்
றோன்றிடவேவருந்துணைபெண் நாசஞ்செப்பே. (கூச)

வேறு.

மதிமகன்பருதிசுங்கன் வந்திடச்சுபர்வீடாகப்
புதியுடன்குருதிபொன்னன் பகரிடம்மறையாதாகில்
விதியுடன்பிறக்குஞ்சேய்க்கு விதித்தனர்துணைவர்மூன்று
சதியுடன்கன்னியொன்று சாற்றினருடன்வந்தெய்தும். (கூரு)

பருதியும்புகர்மாலோடு பகரிடமறையாதாகில்
குருதியும்பவரிற்சேரக் குறித்தனர்முன்பின்சுத்தம்
கருதியேபிறக்குமாது கருத்துடன்கன்னியைந்து
சுருதியாணிரண்டதாகத் துணிவுடனுடன்வந்தெய்தும். (கூசு)

வந்திடுந்துணைவர்நாசம் வகுத்தனர்கணிதமாய்ந்தோர்
சிந்தையாமுக்கோளோடு தீயகோட்சேருமாகில்
விந்தையாய்த்துணைவரெல்லாம் விரைவுடன்நாசங்காட்டும்
முந்தவேதுணைவரொன்று மொழிந்தனர்வளருமாதோ. (கூஎ)

வேறு

சந்திரன்மால்ஆரல்பரி பதினொன்கோளுஞ்
சாருமிடஞ்சுபர்வீடா யுதயமாக
வந்திடுமிக்கோள்தனையே காரிநோக்க
வருஞ்சேய்க்குத்துணைவரிரு கன்னிரண்டாம்

விந்தையெனவுடன்வரினும் பெலமதாக
விதித்தனர்கள்கணிதமொழி நூலாய்ந்தோர்கள்
சிந்தையுடனரல்பரி மால்வீடுற்றூற்
செத்திடுமேகன்னியொன்று துணையொன்றாகும். (௯அ)

சூரியன்மால்பாம்புடனே புகரொன்றாகித்
தோன்றுமிடமறையாமற் சுபர்வீடானல்
கூருயிர்க்குப்பன்னேனுஞ் சுபர்வீடேகிக்
குறுகிடமேமறையாமல் வளருமாகிற்
சீருடனேவருஞ்சேய்க்குத் துணைவரைந்து
செப்பிடவேகன்னியிரண் டுடன்வந்தெய்தும்
சூரியன்மால்புகர்பாம்பு மறையுமானற்
றுஞ்சிடுமேயிரண்டுகன்னி துணைமூன்றாகும். (௯௯)

மால்பருதியாரல்குரு வோர்வீடேகி
வளருமிடமறையாமற் புகர்வீடானல்
சாலவிலக்கினந்தனக்குப் பதினேன்கோளன்
சாருமிடமறையாமல் வளருமாகில்
தூலமதாய்வருஞ்சேய்க்குத் துணைவரேழு
தோன்றிடுமேகன்னியைந்து வுடன்வந்தெய்தும்
மால்பருதியாரல்குரு மறையுமாகில்
வருந்துணைவர்மூன்றேழியுங் கன்னிநாலு. (௧00)

மதிமகனும்புகர்சேயுங் காரியோடு
வரினுமிடமறையாமற் சுபர்வீடானல்
சதியுடனேயுயிர்தனக்குப் பன்னேன்கோளன்
சாருமிடமறையாமற் சுபர்வீடுற்றூல்
விதியுடனேவருஞ்சேய்க்குத் துணைவர்மூன்று
விதித்தனர்கள்கன்னியிரண் டுடன்வந்தெய்தும்
மதிமகனும்புகர்சேயுங் காரியோடு
மறைந்திடவேமாதிரண்டு நாசங்காட்டும். (௧0௧)

குருதிபுகர்கரிமாலு மோர்வீடேகிக்
குறுகிடவேமதிவீடாய் வளருமாகிற்
பருதியுடனுயிர்தனக்குப் பதினேன்கோளன்
பண்புளலக்கினந்தனக்கு வியமதானல்

சுருதியுடன்வருஞ்சேய்க்குத் துணைவரெட்டு
தோன்றிடுமேனதயலிரண் டுடன்வங்தெய்தும்
குருதிபுகர்கரிமாலும் பருதிவீட்டிற்
குறுகிடவேதுணைநாசம் இருமூன்றாகும். (௧0உ)

வேறு.

மதிமகன்குருதி மூன்றினேனுடனே வருமிடஞ்சுபர்கள்வீ
டாகச், சதிருடனிக்கோள் தனையுமேசுபர்கள் தன்விழிப்பார்
வையேயானல், விதியுடன்பிறக்குஞ் சாதகன்றனக்கு விதித்த
னர்துணையிரண்டுடனே, கெதிபெறவிரண்டு கன்னியரிரண்டா
ய்க் கெணித்தனர் சாதகன்றனக்கே. (௧0௩)

வேறு.

பருதியுடன்புகர்மாலுங் கொடுங்கோளோடு
பகரிடங்கேந்திரமாகிச் சுபர்வீடாகக்
குருதியுயிர்தனிற்சேரச் சுபர்வீடாகிக்
குறுகிடவேமுன்பின்னுஞ் சுபர்வீடானல்
கருதிவரும்பிறவிகன்னி நாலதாகும்
காசினியிற்பெலமாகக் கூடிவாழ்வர்
உறுதியிதுமாதர்துணை திறமாய்நாலோ
ருரைத்தனராணிரண்டுசேய் பெலமதாமே. (௧0௪)

வேறு.

குருதியும்பதினென்றேனுங் குறுகியோரில்லமாகச்
சுருதியாயுயிர்க்குமூன்றேன் றேன்றிடமறைவதானல்
கருதியேபிறக்குஞ்சேய்க்குக் கருத்துடன் துணைவரஞ்சாங்
குருதியுந்தனிப்பாராகிற் குறித்திடுந்துணைவர்நாசம். (௧0௫)

மதியுடன்குருதியோடு வருமிடம்பருதிவீடாய்ச்
சதியுடனுயிர்க்குப்பன்னேன் சாரிடமறையாதாகில்
விதியுடன்றேன்றஞ்சேப்க்கு விதித்தனர்முன்னேர்நாசம்
அதிகமாய்ப்பின்னேனென்றென் றறைந்தனர்தரணிமீதே. ()

மதியுடன்மூன்றின்கோளன் மாந்தியுமோர்வீடேகிச்
சதியுமாவினுக்குநாலிற் றரித்திடவுயிர்க்குப்பன்னேன்

விதியுடன்மால்சேயோடு விரைவுடன்குருவீடானல்
பதிதனிற்றேன்றுஞ்சேய்க்குப் பகர்ந்தனர் துணைவர்நாசம். ()

வருந்துணைநாசங்காட்டும் வகுத்தனர்பிறந்தசேய்க்கு
இருந்திடுந்துணைவர்மூன்று மிறைபவன்மதிவீடானல்
தருந்துணைத்தானந்தன்னிற் சசிமகன்புகர்வந்துற்றால்
வருந்துணைபொன்றுசேதம் வகுத்தனர்தரணிமாதே (க0அ)

மாதவர்மொழிநூலாலே வளர்ந்திடக்குருதிமூன்றேன்
வேதமாயோர்வீடாக வெய்யவனுயிர்க்குப்பன்னேன்
நீதமாய்ச்சுபர்வீடுற்றால் நிகழுமாணிரண்டுநாலு
ஓதிடுங்கன்னியாறு யுலகினிலுடன்வந்தெய்தும். (க0கூ)

வந்திடுங்குருதிமூன்றேன் மாலவனேர்வீடாகத்
தந்திடுமுயிர்க்குப்பன்னேன் சாரிடம்பகைவந்துற்றால்
முந்தவேபிறக்குஞ்சேய்க்கு மூன்றுடன்துணைவராகும்
மந்தனுங்குருதியோடு வளர்பகைமறையுமாகில். (கக0)

குருதியுமிறைவன்வீட்டிற் குறுகிடவதற்குநாதன்
வருமிலக்கினத்துக்கெட்டில் வந்திடத்தீக்கோளோடு
தருமுயிர்தனக்கோரைந்திற் றனித்திடமூன்றேன்வந்தால்
சுருதியாய்த்துணைவர்நாலு தோன்றிடுமிருவர்கன்னி. (ககக)

சந்திரன்மூன்றேனுகிச் சாரிடம்புதன்வீடாக
வந்துயிர்தனக்குப்பன்னேன் வருமிடங்குருதிவீடால்
விந்தையாயதற்குநாதன் விரைவுடன்குருவீடுற்றால்
சுந்தரத்துடனேகன்னி தோன்றிடுமிருவர்மாதே. (கக உ)

மாதவர்கணிதநூலால் வகுத்தனர்துணைவர்நாலு
வேதமாயுடன்பிறந்தார் விதித்தனர்சாதகற்குப்
போதவேயிறைவனேடு பொருந்திடப்பவர்வந்துற்றால்
சேதமாந்துணையிரண்டு செத்திடுங்கன்னிரண்டே. (ககங)

மதிமகன்மூன்றின்கோளும் வளருகேந்திரத்திலேறச்
சதியுடனுயிர்க்குப்பன்னேன் சாரிடம்மறையாதாகில்
விதியுடன்குருவும்நீசம் விளங்கிடப்பிறந்தசேய்க்கு
அதிகமாந்துணைவரேழோ டமர்ந்திடுங்கன்னிநாலே. (ககச)

நாலினேன்மூன்றின்கோளும் நல்கிடவோர்வீடாகத்
தூலமாய்க்குருதிமூன்றிற் றேன்றிடவுயிர்க்குப்பன்னேன்

சாலவேவுதயமாகத் தரித்திடுஞ்சாதகற்கு
ஏலவேதுணைவரொன்ருே டிரண்டெனக்கன்னிமாதோ. (௧௧௫)

மதிமகன்மூன்றின்கோளன் மந்திரிபரியோடொன்ருய்ச்
சதியுடனுயிர்க்குமூன்றிற் றரித்திடப்பவர்வீடாக
விதியுடன் குருதிசங்கன் விரைவுடன்சுபர்வீடுற்ருற்
பதிதனில்வளருஞ்சேய்க்குப் பகர்ந்தனரேகஞ்செப்பே. (௧௧௬)

செப்பிடுமூன்ருேன்பொன்னன் சேரிடம்மறையாதானுல்
இப்படிபிறக்குஞ்சேய்க்கு இசைத்தனர்துணைவரெல்லாம்
தப்பிடுநாசமென்று சாற்றினுர்கணிதநூலோர்
கப்பிடுமூன்ருேன்பொன்னன் கலந்திடமுதயம்வந்தால். (௧௧௭)

வந்திடுந்துணைவரேழு வகுத்தனர்கன்னிநாலு
சிந்தையாயுடன்வந்தேகிச் சேர்ந்திடும்பெலமென்ருேதே
முந்தவேஅக்கோள்நீச மொழிந்திடப்பிறந்தசேய்க்கு
விந்தையாய்த்துணைவரொன்று விதித்தனர்பெலமென்ருேதே. ()

வேறு.

பொன்னவன்மால்பாம்பொடுசேய் மூன்றின்கோளும்
பொருந்திடவேமறையாமற் சுபர்வீடாக
மின்னுயிர்க்குப்பதினொன்ருேன் கொடியோன்மேவ
விளங்கிடுஞ்சாதகற்குவருந் துணைவரைந்தாம்
நன்னயபைந்தொடியிரண்டா முடன்வந்தேகி
நல்கிடுமென்ருேதினர்கள் பெலமொன்ருகப்
பொன்னவன்பானுயிர்க்குமுன்பின் வந்தானுகிற்
பொன்றிடுமேபெண்ணென்று துணையஞ்சோதே.(௧௧௮)

வேறு.

ஓதிடுமுயிரின்கோள னுயர்வுடன்வளருமாகில்
வேதமாய்த்துணைவர்நாலு விதித்தனர்கன்னிநாலாம்
ஓதினுர்பெலமென்ருேதி யுரைத்தனர்சாதகற்கு
நீதமாயிருக்குமென்று நிச்சயந்தெரியச்சொல்லே. (௧௨0)

குருதியும்பதினொன்ருேனுங் குறுகிடமறையாதானுல்
வருமுயிர்சாதகற்கு வகுத்தனர்துணைவர்நாசம்

சுருதியாயுயிர்க்குப்பன்னோன் றோன்றிடக்கரியோடுற்றால்
கருதியதுணைவரொன்று கருத்துடன்பெலமென்றோதே. (௧௨௧)

மந்தனும்பதினொன்றோனும் வக்கிரன்புகர்பொன்னோ
விந்தையாய்ச்சுபர்வீடேகி விளங்கிடப்பிறந்தசேய்க்கு
வந்திடுந்துணைவராறு வகுத்தனர்மாதுமூன்றாஞ்
சிந்தையாய்மறையுமாகிற் செத்திடுஞ்சேய்பெண்ணாஞ்சே. ( )

குருதியும்மூன்றின்கோளுங் குளிர்மதிபுகரோடொன்றாய்
வருமுயிர்தனக்குமுன்பின் வந்திடப்பிறந்தசேய்க்குச்
சுருதியாயேகமாகத் தோன்றிடும்பிறந்தசேயாங்
குருதியுமூன்றோன்சுங்கன் குறுகிடப்பொன்வீடுற்றால். (௧௨௩)

உத்ததோர்சாதகற்கு வுயிர்த்துணையுள்ளோரெல்லாம்
செத்திடுமென்றுநூலோர் செப்பினார்தரணிமீது
சத்தியாயக்கோளாறிற் றரித்திடப்பிறந்தசேய்க்குச்
சுத்தியாய்த்துணைவரொன்று தோன்றிடுந்தரணிமாதே. (௧௨௪)

நாலினோன்மூன்றின்கோளும் நலமுடனோர்வீடேகிச்
சாலவேவுயிர்க்குமூன்றிற் றரித்திடப்பிறந்தசேய்க்குத்
தூலமாய்த்துணைவர்மூன்று தோன்றிடுங்கன்னிநாலாய்
நாலினோன்மூன்றின்கோளும் நல்கியேயுயிரில்வந்தால். (௧௨௫)

வந்திடுஞ்சேய்க்குக்கன்னி வகுத்தனரிருமூன்றாகச்
சிந்தையாய்த்துணைவர்நாலு சேர்ந்திடுந்தரணிமீது
விந்தையாய்க்கோளஞ்சில் விளங்கிடப்பிறந்தசேய்க்குச்
சுந்தரத்துடனேகன்னி தோன்றிடுமிருவர்மாதே. (௧௨௬)

மாலவன்குருதிபொன்னன் வன்புகரிக்கோளொன்றாய்ச்
சாலவேயுயிர்க்குமூன்றிற் றரித்திடப்பிறந்தசேய்க்கு
ஏலவேதுணைவரேழோ டெழிலுறுங்கன்னிமூன்று
தூலமாயுதித்திட்டாலும் சொல்லுவேனதனிற்சேதம். (௧௨௭)

சேதமாங்காலனார்க்குச் சென்றிடுந்துணைவரொன்று
மீதமாங்கன்னிமூன்று விதித்தனர்நாசமாகப்
போதமிச்சாதகற்குப் பொருந்தியதுணைவராறு
ஓதினார்பெலமதாக வுரைத்தனர்கணிதநூலோர். (௧௨௮)

குருவுடன்மாந்தியோடு குறுகிடக்காரிவீடாய்
வருமுயிர்தனக்குப்பன்னேன் வருமிடம்புதன்வீடுற்றால்
சுருதியாய்த்தோன்றுஞ்சேய்க்குத் துணிவுடன்துணைவர்நாலு
கருதியகன்னியஞ்சாய்க் கருத்துடன்தோன்றுமாதே. (கஉகூ)

மாதவர்மொழிநூலாலே வருமுயிர்மூன்றின்கோளன்
வேதமாய்ப்பாவரோடு விளங்கிடநீசமானற்
போதவேதுணைவர்மூன்று பொன்றிடுந்தரணிமீது
ஓதினர்கன்னியஞ்சு முயர்வுடன்நாசங்காட்டும். (கரு0)

மந்தனுமூன்றின்கோளும் வருமிடஞ்சேய்வீடாகச்
சிந்தையாயுயிர்க்குப்பன்னேன் சேரிடமறையாதாகில்
விந்தையாயாறின்கோளன் விரைவுடன்மதிவீடுற்றால்
வந்திடுந்துணைவரெல்லாம் மாய்ந்திடுங்கன்னியொன்றே. (கருக)

வேறு.

மாலவன்குருதி பருதிபொன்னேடு வருமிடம்வளருகேந்திரமாய்ச், சாலவேவுயிரோன் மூன்றினேனுடனேசாரிடம்வளருகேந்திரமாய், ஏலவேதோன்றுஞ் சாதகன்றனக்கு இசையுடன் துணைவரேழாகும், கோலமாம்பெண்ணே அஞ்சுடன் செப்பக் குறுகிடுங் கன்னிமூன்ருெழியும். (கருஉ)

மதியுடன்பருதி மூன்றினேனுடனே வருமிடம்புதன்புகர்வீடாய்ச், சதியுடன்குருதி யிறையவனுடனே சாரிடம்வளருகேந்திரமாம், விதியுடன்ரூன்றுஞ் சாதகன்றனக்கு விதித்தனர் சகோதரத்துன்பம், அதிபதியாகக் கன்னிநாலுடனே அமர்ந்திடுந்தரணியில்மாதே. (கருரு)

வேறு

மந்தனுங்குருதியோடு வளருகேந்திரத்திலேக
வந்துயிர்தனக்குமூன்ருேன் வருமிடம்மறைவதானற்
சிந்தையாய்த்தோன்றுஞ்சேய்க்குச் செப்பினர்துணைவரொன்று
சுந்தரத்துடனேகன்னி தோன்றிடுமேகமாமே. (கருச)

வேறு.

மாலோனும்சேய்புகருங் குருவீடேகி
வரவவர்முன்பின்கடுங்கோள் மறையாதாகில்
நீலனும்பொன்மூன்றின்கோள் மூன்றிற்சேர
நின்றிடுமேபவர்வீடாய் மறைவதானல்

தூலமுடன்வருஞ்சேய்க்குத் துணையஞ்சாகத்
தோன்றிடுமேயிரண்டுகன்னி துகையதாக
மாலோனுஞ்சேய்புகரும் புதன்வீடானல்
வருந்துணைவர்நாசமென வகுத்தார் நூலோர். (கரு௫)

குருவுடன்மால்சேய்புகரும் பவர்வீடாகிக்
குறுகிடவேமுன்பின்னும் பவர்வந்துற்றால்
வருமுயிர்க்கோள்மூன்றினுக்கோள் மூன்றிற்சேர
வரவவர்க்குமுன்பின்னுஞ் சுத்தமானல்
பெருமையுளசாதகற்குத் துணைவரெட்டு
பெண்ணிரண்டுசாற்றினர்கள் கெணிதமாய்ந்தோர்
வருந்துணைவரஞ்சுடனே நாசங்காட்ட
வகுத்தனர்கள்வேதமொழி வளருமாதே. (கரு௬)

வேறு.

மதிமகன்மூன்றின்கோளும் வக்கிரனுடனென்ருகிச்
சதிருடன்பாவர்வீடாய்த் தரித்திடமறைவதானல்
விதியுடனேகமாக விளங்கிடும்பிறந்தசேயாம்
மதிமகன்மூன்றின்கோளும் வக்கிரன்மறையாதாகில். (கரு௭)

மறைவிலாவளருஞ்சேய்க்கு வகுத்தனர்முன்பின்நாசம்
விரைவுடன்முக்கோள்தானும் விளங்கிடங்குருவீடானல்
முறையுடன்துணைவரேழு மொழிந்தனர்வஞ்சியஞ்சாய்க்
குறைவிலாதிருப்பதாகுங் குறித்தனர்பிறந்தசேய்க்கு. (கரு௮)

வேறு.

முதுமகன்மாலோன் மூன்றின்கோளுடனே மூன்றிலெட்டினில்வருமால், சதியுடனரா வுயிர்க்குப்பன்னேனு சார்ந்தவரோர்மனைமறைய, விதியுடன்பிறக்குஞ் சோதரரைந்தாய் விதித்தனர் கன்னிநாலுடனே, பதிதனில்வருமால் துணைவர்கள்நாசம் பகர்ந்தனர் சாதகன்றனக்கே. (கரு௯)

சாதகன்றனக்குச் சோதரர்நாசம் சாற்றினர்கணிதநூல் விதியால், ஒதிடும்பன்னேன் பலருடன்பவர்வீ டுறைந்திடப்பவர்கள் பார்வையினற், சேதமுன்னுரைத்த கன்னியர்நாலும் செகந்தனிற் செத்திடுமின்னும், வேதமாய்ப்பன்னேன் சுபருடன்சுபரில் விளங்கிடச்சுபர்கள் நோக்கிடுமால். (க௪0)

மாலதாய்க்கணிதர் வகுத்தனர்நாலு மங்கையர்வெகுதிற
மாகச், சாலவேவுயிர்க்கு மூன்றினோன்பன்னோன் சாரிடமில்ல
மொன்றாகித், தூலமாயக்கோள் மறைவிலாதாகிச் சுபமுடனிவர்
கள்நோக்கிடவே, ஏலவேதோன்றுஞ் சாதகன்றனக்கு யிருந்தி
டார் சோதரர்நாசம். (கசக)

குருதியும்பாம்புங் குருவும்பன்னோனுங் குளிர்மதியோர்
மணைமறையால், அருமையாமுயிர்க்குப் பத்துமொன்றதனிலமர்
ந்திட மாந்திவந்திடவே, சுருதியிப்படியாய்ப் பிறந்திடுஞ்சேய்க்
குத் தோன்றிடார் சோதரரேகம், குருதியுமுயிரிற் குருவுமுன்
பின்னுற் குறுகிடச்சுபர்கள் நோக்கிடுமால். (கசஉ)

நோக்கிடுஞ்சேய்க்கு வருந்துணைநாசம் நூல்மொழிபோ
வெனவுரையே, தாக்கியகுருதி சுபருடவீடாய்த் தரித்திடப்பவர்
கள்நோக்கிடவே, தீர்க்கமுமிரண்டா மிரண்டுடன்போக்கிற் சேர்
ந்திடுமுன்சமபலனும், போக்குடன்குருதி பொருந்திடச்சொந்
தும் புகர்மதிகுருவு நேரிடுமால். (கசங)

வேறு

குருதியுமூன்றோன்பன்னோன் கொடியகோளுடனொன்றாகி
வருமுயிர்தனக்கீராறில் வந்திடப்பிறந்தசேய்க்குச்
சுருதியாயேகமாகத் தோன்றிடுந்தரணிமீது
கருதியமதிபொன்கேது காணகேந்திரம்வந்துற்றால். (கசச)

வந்திடுஞ்சேய்க்குநூலோர் வகுத்தனர்துணைவரெல்லாஞ்
சிந்தையாய்நாசங்காட்டுஞ் செப்பினர்கணிதமாக
விந்தையாய்மதிபொன்னால் விரைவுடனோர்வீடுற்றால்
வந்திடுந்துணைவரேழு வகுத்தனர்கன்னியஞ்சாய். (கசரு)

சூரியன்பாம்புமால்சேய் தோன்றுமிக்கோட்களொன்றாய்ச்
சாருயிர்தனக்குநாலிற் றரித்திடப்பிறந்தசேய்க்குச்
சீருடற்பிறப்பனேகஞ் செப்பினர்கணிதநூலோர்
சூரியன்பாம்புமால்சேய் துணிவுடன்மறைவதானால். (கசசு)

மறைவுதாய்ப்பிறக்குஞ்சேய்க்கு வகுத்தனர்துணைவரெல்லாம்
விரைவுடன்நாசங்காட்டும் விதித்தனர்தரணிமாதே
முறையுடன்குருதிபன்னோன் மூன்றினோனோர்வீடுற்றால்
விரைவுடன் துணைவரஞ்சு விதித்தனர்கன்னிநாலாய். (கசஎ)

வேறு.

சூரியனுமுயிர்தனக்கு மூன்றின்கோணும்
 தோன்றிடவேசுபர்வீடாய் மதிக்கஞ்சாகச்
சீருடனேவுயிர்தனக்குப் பன்னொன்சேயுஞ்
 சேரிடங்கேந்திரமாகிப் புதற்கீராறில்
கூறிலக்கினந்தனக்கு மூன்றாறெட்டிற்
 குறுகிடக்கேதுடன்றனித்தாற் பிறக்குஞ்சேய்க்கு
ஆரியனாணைப்படியே வுடன்வந்தெய்தும்
 அறைந்தனர்மாதுடன் துணைவ ரைந்துநாசம். (௧௪௮)

வேறு.

ஆரலும்புதன்வீடேக வங்குளோன்புகரோடொன்றாய்ச்
சாரிடமுயிர்க்கிரண்டிற் றரிக்கவாவிக்குப்பன்னொன்
சீருடன்பாம்போடொன்றாய்ச் சேரிடமுயிர்க்கஞ்சானால்
கூறினர்பிறக்குஞ்சேய்க்குக் குறித்தனர்துணைவர்நாசம். (௧௪௯)

வேறு.

கரியுடனேமாந்திபுகர் பதினொன்றோனுங்
 கருதுமிக்கோள்மறையாமற் சுபர்வீடாகச்
சரியுடனேவுயிர்தனக்கு மூன்றாறெட்டிற்
 றனித்திடவேயவ்வில்லஞ் சுபர்வீடானால்
பிரியமுள துணைவர்பெல மிருமூன்றொன்று
 பேசினர்கள்மாதுடனே இரண்டொன்றாகும்
வரிசையுளஜீவனுக்குப் பன்னொன்மூன்றில்
 வந்திருக்கவச்சேய்க்குத் துணைவர்நாசம். (௧௫௦)

மதிமகனும்பரியுடனே மூன்றோன்பன்னொன்
 வரினுமிக்கோளோர்வீடாய் மறையுமாகிற்
சதியுடனேவுயிர்தனக்கு மூன்றோன்வீட்டிற்
 றனித்திடப்பாம்பதிற்சேரப் பவர்வீடானால்
பதியிலுதித்திடுஞ்சேய்க்குத் துணைவரெல்லாம்
 பலியாகமாயுமென வுரைத்தார்நூலோர்
மதியுடன்பொன்னவன்மூன்றோன் மறையாதானால்
 வந்திடுமாதுடனொன்று வளருமாதே. (௧௫௧)

குருவுடன்சேய்மூன்றேனு மோர்வீடேகிக்
குறுகிடவேசுபர்வீடாய் மூன்றுறெட்டிற்
கரியிலக்கினந்தனக்குப் பன்னேறைறிற்
றனித்திடவேவருஞ்சேய்க்குத் துணைவர்நாசம்
வருமாவிக்குப்பன்னேன் மூன்றேன்சேயும்
மறைந்திடவேசுபர்வீடாய்த் துணைவர்சுத்தம்
தருமுயிர்க்குப்பன்னேனு மூன்றேன்சேயுஞ்
சாரிடங்கேந்திரஞ்சுபர்வீ டாகவந்தால். (௧௫௨)

வந்திடுஞ்சேயவன்றனக்குத் துணைவரேழு
வகுத்தனரஞ்சாரணங்கு வுடன்வந்தெய்துஞ்
சிந்தையுடனுயிர்தனக்குப் பன்னேன்சேஞ்
சேரிடங்கேந்திரமாகிப் பவர்வீடுற்றால்
விந்தைமிகவுடன்வரினுஞ் சேய்நால்மாது
விளங்கிடுமிப்படியாக வுரைக்குமாதே
சுந்தரமாய்நிலமகனுஞ் சுபர்வீடாகித்
தோன்றிடுமக்கோளனுமே மறையுமானல். (௧௫௩)

புந்தியாதவன்குளிகன் பதினொன்றேனும்
பொருந்திடங்கேந்திரமாகிப் பவர்வீடாகச்
சிந்திலக்கினந்தனக்கு மூன்றேன்சேயுந்
திங்களுடனொன்றாகி யுயிர்முன்வந்தால்
விந்தைமிகத்தோன்றிடுஞ்சேய் துணைவராறு
விளங்கிடும்பெண்ணிரண்டொன்றே வுடன்வந்தெய்தும்
முந்திடுமூன்றுமிடத்திற் பவர்வந்துற்றால்
முடிந்திடுஞ்சேய்நாலெனவே முன்னோர்சொன்னர். ()

மதியுடனேபுகர்பன்னேன் கோளன்றேனும்
வருமிடங்கேந்திரமாகிச் சுபர்வீடாகச்
சதியுடனேவுயிர்தனக்கு மூன்றேன்சேயுஞ்
சாரிடமேபவர்வீடாய் மறையுமாகில்
பதியிலுதித்திடுஞ்சேய்க்குத் துணைவரேழு
பகர்ந்தனர்பெண்ணுடன்வரினு மிருநாலாகும்
மதியுடனேபுகர்பன்னேன் மூன்றேன்சேயும்
வருமிடங்கேந்திரமாகி யுதயம்வந்தால். (௧௫௫)

வந்திடுஞ்சாதகன்றனக்குத் துணைவரஞ்சு
வாய்த்திடும்பெண்மூன்றெனவே வகுத்தார் நூலோர்
சிந்தையுடனுயிர்தனக்கு மூன்றோன்பன்னோன்
சேயுமேமதிவீட்டிற் சேருமாகில்
மைந்தனிவனுடன்பிறந்த துணைவர்நாலு
மாதர்களுமிரண்டொன்று வந்தாலுந்தான்
அந்தமதிலாணிரண்டு பெண்ணுமொன்றாய்
அவனியதிலிருந்திடுமென் றறைந்தார்மாதோ. (௧௫௬)

குருதிபுகர்மதியுடனே பன்னோன்றானும்
குறுகிடவேசுபர்வீடா யுதயமேறப்
பருதியுடன்மூன்றோனுங் குளிகனோடு
பகரிடமேபவர்வீடா யுயிர்க்குமூன்றிற்
சுருதியுடன்வருமாகிற் றுணைவரஞ்சு
தோன்றிடும்பெண்நாலெனவே தொகுக்கலாகும்
குருதியுடன்புகர்மதியும் பன்னோன்றானுங்
குறுகிடவேமறையுமெனத் துணைவர்சேதம். (௧௫௭)

சேதமெனத்துணைவரைந்து நாசங்காட்டுஞ்
செப்புமெனவருங்கன்னி யிரண்டுமாயும்
ஓதிடுவர்கணிதமொழிப் படியாய்மேலோர்
உண்மையாயுலகதனிற் பிறந்தசேய்க்கு
நீதியுடனுயிர்தனக்கு மூன்றோன்சேயும்
நின்றிடங்கேந்திரமாகிச் சுபர்வீடுற்றால்
வேதமொழிப்படியாக வருஞ்சேயொன்று
விளங்கிடுமேமாதுடனே யிருவர்சேதம். (௧௫௮)

பரியுடன்மால்சேய்பன்னோன் மூன்றினோனும்
பகரிடங்கேந்திரமாகச் சுபர்வீடாகக்
கரியுடனேமாந்தியொன்று யோர்வீடேகிக்
கருதுமிக்கோள்பவர்வீடாய்ப் பன்னொன்றானல்
வரியுடன்தோன்றிடுஞ்சேய்க்குத் துணைவரெட்டு
வாழ்ந்திடும்பெண்ணறெனவே தரிக்கலாகும்
கரியுடனேகுளிகனுமங் கலனுஞ்சேர்ந்தால்
கருத்துடன்பெண்பெலமாகு மாணிரண்டே. (௧௫௯)

வேறு.

சந்திரன்பன்னோனாகிச் சாரிடம்புந்திவீடாய்
வந்திடவக்கோள்பானும் வருமிடம்பதினொன்றாகச்
சிந்தையாய்க்குருதிமூன்றோன் சேரிடமறைவீடுற்றால்
பைந்தொடிதுணைப்பெண்நாசம் பகுத்தனர்துணைவரொன்றே.()

வேறு.

மதியுடன்சேய்பன்னோனு மோர்வீடேகி
வருமிடங்கேந்திரமாகிச் சுபர்வீடாகச்
சதியுடன்பொன்மூன்றோனும் பவரிலாமற்
சாரிடமேமறையாமற் சுபர்வீடுற்றால்
விதியுடன்தோன்றிடுஞ்சேய்க்குத் துணையிரண்டாய்
விதித்தனராரணங்குமூன் றுடன்வந்தெய்தும்
மதியுடன்சேய்பன்னோனு மோர்வீடாகி
வரினுமிடம்பவர்வீடாய் வளருமாதே. (௧௬௧)

மாதேகேளுடன்வரினுந் துணைப்பெண்நாசம்
வகுத்தனர்நூற்கணிதவழிப் படியென்றோதே
கோதேகேள்மதியுடன்சேய் பன்னோன்றன்னைக்
குருநோக்கவருஞ்சேய்க்கு வுடற்பெண்ணொன்றாய்
வேதாகமப்படியே பெலமென்றோத
விதித்தனரால்முக்கோளைப் பவர்நோக்குற்றால்
ஓதிடுவன்சாதகற்குப் பெண்தானொன்று
உதவிடாதெனவுடனு மொழியுந்தெற்கில். (௧௬௨)

குருதியுமாண்டளப்பானு மூன்றோனோடு
குறுகிடங்கேந்திரமாகச் சுபர்வீடாகி
வருமுயிர்க்குப்பன்னோனுஞ் சுபரேயாக
வரினுமிடம்பவர்வீடாய் மறையுமாகில்
அருமையுறுந்துணையிருவர் மாதுமூன்று
அமர்ந்தாலும்பெலமாக வளருமாதே
குருவுடனேமங்கலனும் மூன்றோன்றானுங்
குறுகிடமேபவர்வீடேல் துணைவர்நாசம். (௧௬௩)

வேறு.

மதிமகன்பதினோராங்கோள் வக்கிரனோர்வீடாகித்
ததியிலக்கினத்துக்கீறிற் றரித்திடச்சுபர்நோக்கில்லா

விதியுடனுயிர்க்குமூன்றில் விளங்கிடமதிபாம்பாகிற்
பதிதனில்வளருஞ்சேய்க்குப் பகர்ந்தனர்துணைவர்சுத்தம். ()

மறையவன்மூன்றோனாகி மறைந்திடமால்வீடேக
விரைவுடன்பன்னோன்சேயும் விளங்குயிர்தனக்குமுன்பின்
முறையுடனிருக்கமேலோர் மொழிந்தனருபயமாது
திறமுடன்துணைவரொன்று சேரவாழ்ந்திருக்குஞ்சேய்க்கு. ()

சேயவன்றனக்குநூலோர் செப்பினர்கணிதமாக
தீயதாய்ப்பன்னோன்சேயுஞ் சேரிடமுயிர்முன்சார
ஆயவனோடுயெக்கோ ளமர்ந்திடாதிருப்பதானால்
சேயவன்றனக்குமுந்தி செத்திடுந்துணைமாதெல்லாம். (௧௬௬)

புந்திசேய்பன்னோன்மூன்றோன் பொருந்திடமால்வீடாக
வந்துமக்கோட்கடன்னை வருஞ்சுபர்நோக்காதானால்
சிந்தையாய்த்துணைவரஞ்சு சேர்ந்திடுமாதுமூன்றாய்
வந்திடுந்துணைவரெல்லா மாய்ந்திடுந்தரணிமாதே. (௧௬௭)

வேறு.

மந்தனுஞ்சேய்மூன்றோனு மோர்வீடாகி
வருஞ்சுபர்வீடாகியக்கோள் மறையாதாகிற்
சிந்தையுடனுயிர்தனக்குப் பன்னோன்பாம்பு
சேரிடங்கேந்திரமாகிப் பவர்வீடுற்றால்
வந்திடுஞ்சேயவன்றனக்குத் துணைமூன்றாக
வகுத்தனர்பெண்ணுடன்வரினு மிருநாலாகும்
விந்தையுடன்வருஞ்சேய்க்குத் துணைப்பெண்மூன்று
விதித்தனர்மாய்ந்திடுமெனவே கணிதநூலோர். (௧௬௮)

மந்தனுஞ்சேய்மூன்றோனு மோர்வீடாகி
வந்திடக்கேந்திரமாகிச் சுபர்வீடாகச்
சிந்தையுடனுயிர்தனக்குப் பன்னோன்றானும்
சேரிடமேமால்வீடாய்ச் சுபரோடுற்றால்
வந்திடுஞ்சேயவன்றனக்குத் துணையொன்றாக
வகுத்தனர்களுடன்வரினும் வரும்பெண்ணஞ்சு
மந்தனுஞ்சேய்மூன்றோனு மோர்வீடாகி
வந்திடவேபவர்வீடாய் மறையாதானால். (௧௬௯)

மறையாமற்பவர்வீடாய்த் தரிக்கவிக்கோள்
மதிதனக்குக்கேந்திரமாய் மதிநோக்குற்றால்
விரைவுடன்றோன்றிடுஞ்சேய்க்கு வுடன்வந்துற்ற
மெல்லியரும்நாசமென விதித்தார்நூலோர்
முறையுடனேவுயிர்தனக்குப் பன்னோன்சேயும்
முதுமகன்வீடாகியிக்கோள் மறையாதாகில்
குறையுடன்தோன்றிடுஞ்சேய்க்குத் துணைநால்செப்பக்
குறித்தனர்நூல்மொழியாகத் தரணிமாதே. (௧௬௯)

சூரியனும்பன்னோனும் மூன்றோன்சேயும்
தோன்றிடங்கேந்திரமாகி யுதயம்வந்தால்
கூறினரிக்கோள் தனையே சுபர்நோக்கில்லா
குறுகிடுஞ்சேயவன்றனக்குத் துணைவர்மூன்று
சீருடனவ்விதந்தெரிவை மூன்றுமேலோர்
தேர்ந்தாய்ந்தகணிதவிதி தெரியச்சொல்ல
சூரியனும்பன்னோனு மூன்றோன்சேயும்
தோன்றிடும்வீடாதிபனே சுபராய்வந்தால். (௧௭௧)

வந்திடவிக்கோட்களுமே சுபர்வீடாகி
வருஞ்சுபர்கள்நோக்காமற் பவர்நோக்குற்றால்
சிந்தையுடன்சூரியனுமூன்றோன்பன்னோன்
சேருமிக்கோள்வரும்வீட்டுக் கதிபன்றானும்
வந்துதானுயிர்தனக்கு மீராறாகி
வந்திடவேசுபர்வீடாய்ச் சுபர்வந்துற்றால்
விந்தையுடன்வருந்துணைவர் நாசமாக
விதித்தனர்பெண்மாய்ந்திடுமே தரணிமீதே. (௧௭௨)

குருவுடன்மால்காரிபரி புகர்பன்னோனுங்
கூடியிக்கோள்மறையாமற் சுபர்வீடாக
வருமுயிர்க்குமூன்றினுக்கோள் சுபராய்நாலில்
வந்திடவேபவர்மனையாய் மறைக்கீராறில்
தருமாவிக்காறிற்சேய் தனிக்கத்தோன்றுஞ்
சாதகன்வந்துடன்வரினுந் துணையிரண்டாம்
வருமுயிர்க்குமூன்றினிலே கடுங்கோள்வந்தால்
மாய்ந்திடுமுன்னுடன்வரினுந் துணையென்றோதே. ()

சூரியன்மால்சேய்மறையும்பன்னேன்கேதுந்
தோன்றிடங்கேந்திரமாகிச் சுபர்வீடாகத்
சாரமூன்றேன்சுபராய்ப் பொன்னன்வீடு
தனித்திடவேசுபர்நோக்க வுயிர்க்குஞ்சானல்
சீருடன்தோன்றிடுஞ்சேய்க்குக் கணிதமாய்ந்தோர்
செப்பினர் நூற்படியாக யோகஞ்செப்பே
சூரியன்மால்திசைமறையும் பன்னேன்கேதுந்
தோன்றிடங்கேந்திரமாகிப் பவர்மனைவந்திடவே. ()

வந்திடவேபூவிற்சேய்க் குடன்வந்துற்ற
வருந்துணைப்பெண்நாசமென வகுத்தார் நூலோர்
சிந்தையுடன்பன்னேனுஞ் சேய்பொன்கேதுஞ்
சேரிடங்கேந்திரமாகிச் சுபர்வீடானல்
விந்தையுடன்தோன்றிடுஞ்சேய் துணைநால்மாது
விதித்தனரஞ்சதுவாக விளம்புமேலோர்
முந்தியவிக்கோட்கடனைக் கரிநோக்குற்றல்
முன்னுறத்தோன்றிடுந்துணைவர் நாசமாதே. (களரு)

வேறு.

மந்தனும்பன்னேனென்றாய் வருமுயிர்தனக்கேழாகச்
சிந்தையாய்ப்புகர்பொன்மூன்றேன் சேரிடம்பவர்வீடாக
விந்தையாய்க்குருதியாட்சி விளங்கிடப்பிறந்தசேய்க்கு
வந்திடுந்துணைப்பெண்ணெல்லாம் மாய்ந்திடுந்தரணிமாதே. ()

வேறு.

சூரியன்மால்மூன்றின்கோ ளோர்வீடாகித்
தோன்றிடங்கேந்திரமாகிச் சுபரில்லாகச்
சீருடனேபுகர்பாம்பு பன்னேன்சேயுந்
தினகரன்வீடதுவாகி யுயிர்க்குமூன்றாய்ச்
சாரிடமேவருந்துணைவ ராறென்றுகும்
தையவிரண்டதுவாகத் தரிக்கமாந்தி
கூரிடவேவருந்துணைவர் நாசமொன்று
குறித்தனர் நூற்படியாகக் கணிதமாய்ந்தோர். (களஎ)

மதிமகனும்பன்னேனு முயிரின்கோளும்
வருமிடமேமறையாமற் பவர்வீடாகச்
சதியுடனேவுயிர்தனக்கு மூன்றேன்வீட்டிற்
றனித்திடவேசேய்வருகி லதற்குநாதன்

விதியுடனேசுபரோடு மறையாதாகில்
விளங்கியசாதகற்குவருந் துணைநாலஞ்சு
பதிதனில்வந்தேகிடுமே வரும்பெண்மூன்று
பகர்ந்தனர்நூற்படியாக வளருமன்றே. (௧௭அ)

வருமெனவேசாதகற்குத் துணைவர்மேலோர்
வகுத்தனர்கள்பெலமாக வளருமாதே
தருமுயிர்க்குமூன்றதிபன் மறைந்துபாவர்
தன்மனையாயுடன்சுபர்கள் தரிக்குமானல்
குறுகிடும்பெண்மூன்றெனவே துணையஞ்சொன்று
குறித்தனரால்சேதமெனக் கணிதமாய்ந்தோர்
சுருதியநூற்படியாகத் தரணிமீதிற்
கருத்துடன்சாதகற்குவருந் துணையாற்சேதம். ()

குருதியுடன்கொடும்பாவர் சுபர்வீடாகிக்
குறுகிடமூன்றுறெட்டுப் பன்னொன்றுகச்
சுருதியுடன்கரிமதிமால் மூன்றோனொன்றும்
தோன்றிடங்கேந்திரமாகிச் சுபர்நோக்கில்லா
கருதிடுஞ்சேயவன்றனக்குத் துணைநாலொன்றுப்க்
கருத்துடன்பெண்ணிரண்டெனவே வுடன்வந்தெய்தும்
குருதிதனைச்சுபர்நோக்காத் துணையிரண்டு
குறுகிடும்பெண்ணிரண்டெனவே நாசங்காட்டும். ()

சூரியன்மால்மாந்தியுடன் புகர்பன்னோனுந்
தோன்றுமிடம்நாலேழு பன்னொன்றுகச்
சீருடனேயிக்கோளைச் சுபர்கள்நோக்கச்
சேயுயிருக்கிராறிற் றனிக்குமானல்
கூறிடவேவருஞ்சேய்க்குத் துணையேழ்ரெண்டு
குறித்தனர்பெண்நாலெனவே கணிதமாகச்
சாருயிர்க்குமூன்றதிலே சேய்பாம்பானற்
சாய்ந்திடும்பெண்ணிரண்டெனவே துணையாறுகும். ()

மாலுடனேமூன்றினுக்கோள் சுபர்வீடாகி
வந்திடவேஅதற்குடையோன் மறைந்துநீசம்
சீலமுட்டனுயிர்தனக்குப் பன்னோன்சேயுஞ்
சேரிடமேவுயிர்தனக்குப் பன்னொன்றுனல்

தூலமாய்த்தோன்றிடுஞ்சேய் துணையஞ்சாகச்
சொல்லினர்மாதுடனிரண்டு வளருமாதே
கோலமதாய்ப்பன்னேனேச் சுபர்நோக்கில்லாக்
கோதைகளிற்பெண்மூன்று குறுகுந்தானே. (கஅ௭)

சூரியன்மால்காரியுடன் புகர்பொன்மூன்றேன்
தோன்றுமிக்கோளோர்மனேயா யுயிர்க்குப்பன்னேன்.
கூரியதோர்தானமதில் வளரவக்கோள்
குளிர்மதிசேய்மாந்தியுட னுயிர்க்குமூன்றுய்ச்
சீரியவத்தானமதில் மறையுஞ்சேய்க்குச்
செப்பிடக்கேளோர்துணைவர் மாதிரண்டு
ஆரியனுணைப்படியே வுடன்வந்தெய்தும்
ஆனுலுமோர்துணைவர் மாதிரண்டே. (கஅ௯)

மூன்றுடையோன்பவராகிப் பன்னேன்றன்னில்
முயன்றிடவேவுடன்குளிகன் புகரொன்றுகத்
தோன்றுமிக்கோளிருந்திடும்வீ டதிபன்றனுந்
தொடர்ந்துசுபராகிடவே மால்வீடுற்றல்
மூன்றுடன்மூன்றுரணங்கு துணைவர்மூன்று
மொழிந்திடுஞ்சேயுடன்வளருங் கணிதமாகத்
தோன்றுமேபன்னேன்கோள் மூன்றேன்நோக்கத்
துஞ்சிடுமேமூன்றுதுணை மாதராறே. (கஅ௪)

வருமுயிர்க்குமூன்றிற்சேய் தனிக்கமூன்றேன்
வருமொருகோள்நீசனெடு மறையாதாகத்
தருமுயிர்க்குப்பன்னேனுஞ் சுபராகிச்
சந்திரன்பாம்புடன்குளிக னிவர்களோடு
வருமுயிர்க்குமுன்பலது பின்பிலானல்
வருந்துணைவர்நாசமென யேகஞ்சேரும்
அருமறைநூல்விதிப்படியா லாரல்நாளில்
அழிந்திடுமேஓர்துணைவ ருதவாதன்றே. (கஅ௫)

காரியுடன்மூன்றினுக்கோள் மறைந்துபாவர்
கடுமனேயாய்மதிதனக்கு மறையாதாகிற்
சூரியன்மால்வருமுயிர்க்குப் பதினென்கோளன்
தோன்றுமிக்கோளுயிர்தனக்கு மறையுமானல்

கூரிடுஞ்சேயவன் றனக்குத் துணைநால்மாது
குணமாயிப்படிமீது வுடன்வந்தெய்துஞ்
சீருடனேகாரிதனைச் சேய்நோக்குற்றூற்
செத்திடும்பெண்மூன்றெனவே துணைவர்மூன்றே. ( )

சந்திரனுங்கேதுடனே மூன்றின்கோளுஞ்
சாரிடமூன்றுறெட்டுப் பன்னொன்றாகச்
சுந்தரமாயுயிர்தனக்குப் பதினொன்கோளன்
தோன்றுமனைசுபமாகி யுயிர்க்கீராறில்
வந்திடவேசுபர்நோக்கால் வளருஞ்சேய்க்கு
வருந்துணைவர்நாசமென வஞ்சியொன்று
விந்தையுடனுடன்வரினுங் கணிதமாய்ந்தோர்
விதித்தனர்நூற்படியாகத் தரணிமாதே. (௧௮௭)

மாதுடனேமூன்றின்கோள் பதினொன்கோளும்
வருமிடமேபவர்வீடாய்ச் சுபர்நோக்கில்லாச்
சீலமுடனிக்கோட்கள் வரினுமில்லஞ்
சேர்ந்திடமூன்றுறெட்டுப் பன்னொன்றாகத்
தூலமதாயுயிர்தனக்கு யிரண்டாறெட்டிற்
றோன்றிடவேசேய்வருகிற் சுபர்வீடானால்
சாலுவெனவருந்துணைவ ரிரண்டாங்கன்னி
சார்ந்திடுமேயிருமூன்று தரணிமாதே. (௧௮௮)

கரியுடனேவுயிர்தனக்குப் பதினொன்கோளன்
கருதுமிடமுயிர்தனக்கு மூன்றுறெட்டு
வருமிடமேசுபர்வீடாய்ச் சுபர்கள்நோக்க
வரினுமக்கோள்மூன்றின்கோ ளுயிர்முன்னாகச்
சரியுடனேமதிதனக்குச் சேயோனாறிற்
சார்ந்திடநால்மாதெனவே துணைநாலாகும்
விரிகுழல்சேர்மூன்றதிலே சேய்பாம்பானால்
விதித்தனர்பெண்துணைவரெலாம் நாசமாதோ. (௧௮௯)

காரியுடன்மூன்றின்கோள் சேய்வீடேகக்
கருதுமக்கோளுயிர்தனக்கு மறையாதாகிற்
சூரியனோடுடன்கலந்து சுபர்கள்நோக்கச்
சுந்தரமாமுயிர்தனக்குப் பதினொன்கோளன்

தேரியமால்கூடியா விக்குநாலிற்
சேர்ந்திடுஞ்சேபவன்றனக்குத் துணையஞ்சொன்று
கூறினர்பெண்ணாறெனவே தரணிமீதிற்
குறித்தனரிப்படியாக வருமென்றோதே. (௧௯0)

ஓதிடுவனுயிர்தனக்கு மூன்றிற்பாம்பு
உறைந்திடவேபவர்வீடாய்த் தனிக்குமாகிற்
சேதம்வருந்துணைநாலு வரும்பெண்மூன்று
செத்திடுமூன்றோதினர்கள் கணிதமாக
நீதியுடன்பாம்புடனே கரிவந்துற்றால்
நேர்ந்திடும்பெண்நாசமென வுரைக்குமேலோர்
சோதிடநூற்படியாகச் சேய்வந்துற்றால்
துஞ்சிடும்பெண் துணையுடனே தலையுமாதே. (௧௯௧)

மாலுடன்சேய்சூரியன்பொன் புகரொன்றாகி
வந்திடக்கேந்திரமாகிச் சுபர்வீடாகச்
சீலமுடனுயிர்தனக்குப் பதினொன்கோளன்
சேரிடங்கேந்திரமாகிச் சுபர்வீடுற்றால்
சாலவெனத்தோன்றிடுஞ்சேய் துணைவரொன்று
சார்ந்திடும்பெண்நாலெனவே வுடன்வந்தெய்துந்
தூலமுடன்பன்னோனு முயிர்க்கெட்டானால்
துஞ்சிடும்பெண்ணிரண்டெனவே தரணிமாதோ. (௧௯௨)

மறையவன்மால்சேய்பருதி புகரொன்றாகி
வரினுமிடமுயிர்தனக்கு இரண்டாறெட்டில்
விரைவுடனேபவர்வீடாய்த் தரிக்கப்பன்னோன்
விளங்குதிரிகோணமதால் வளருமாகில்
முறையுடன்றோன்றிடுஞ்சேய்க்குத் துணைமூன்றொன்று
மொழிந்தனர்கள்பெண்ணிருமூன் றுடன்வந்தெய்தும்
குறையுடனேகாரியினாற் றுணைமூன்றாகக்
குறுகிடும்பெண்மூன்றெனவே குறித்தார்மேலோர். ()

சூரியன்மால்மூன்றின்கோள் புகர்பன்னோனுந்
தோன்றுமிக்கோள் கேந்திரமாய்பவர்நோக்கில்லாச்
சாரிடமேபவர்வீடாய்த் தனிக்கவிக்கோள்
சாதகன்றான்வருந்துணைவ ரிரண்டொன்றாகும்

சீருடனேதோன் றும்பெண் ணிருமூன்றென்று
 செப்பினர்நூற்படியாகக் கெணிதமார்க்கம்
கூறிடமூன் றதிற்கேது வருகுமாகில்
 குறுகிடும்பெண்ணாலெனவே துணையிரண்டே. (கசுச)

குருவுடன்மால்மூன் றின்கோள் பரியொன்பானுங்
 கூடியிக்கோளுயிர்தனக்கு மூன்றுறெட்டில்
வருமிடமேபவர்வீடாய்த் தரிக்கப்பன்னேன்
 வளருயிர்மூன் றதுவாகி மறையுமானல்
அருமறைநூற்படிவிதியாற் றுணையிரண்டோ
 டம்புவியிற்பெண்ணாலொன் றறையுமாதே
தருமுயிர்ப்பன்னேன்மனையில் மதிவந்துற்றால்
 சாய்ந்திடும்பெண்மூன்றெனவே துணையென்றேதே. ()

மதிமகன்சேய்புகர்மறையோன் பதினென்கோளும்
 வருமுயிர்மூன் றின்கோளு முடனென்றாகிச்
சதிருளஜீவன் றனக்குப் பன்னேன்வீட்டிற்
 றரித்திடவேபவராகிப் பவர்நோக்கில்லா
விதியுடன்வந்திடுமாகிற் றுணைநால்மாது
 விளங்கிடுநால்மூன்றெனவே வுடன்வந்தெய்தும்
அதிபதிநூற்படியாக வரும்பெண்சேதம்
 அறைந்தனர்மூன் றதுவாகித் துணைநாலோதே. (கசுசு)

வேறு.

சந்திரன்மூன்றேனுகிச் சாரிடமுயிர்க்கெட்டாக
வந்திடவக்கோள்தானும் மதிமகன்புகர்பான்சேயுஞ்
சிந்தையாயுயிர்க்கீராறிற் சேர்ந்திடப்பிறந்தசேய்க்கு
விந்தையாய்த்துணைவர்சுத்தம் விதித்தனர்தரணிமாதோ. (கசுஎ)

மந்தனுமூன்றேனென்றாய் வருமிடமுயிர்க்கீராறில்
வந்திடவக்கோள்தானும் மதிமகன்புகர்பான்பொன்னும்
சிந்தையாயுயிர்க்கஞ்சாகி விளங்கிடப்பிறந்தசேய்க்குச்
சிந்தையாய்த்துணைவரொன்று செப்பினருடன்வந்தெய்தும். ()

வேறு.

மாலுடனேசூரியன்பொன் புகர்பன்னேனும்
 வந்திடக்கேந்திரமாகி யுதயமேற
நீலனுங்கேதுடன்கூடி வுயிர்க்குமூன்றில்
 நின்றிடவேசுபர்வீடாய்த் தரிக்கச்செவ்வாய்

தூலவிலக்கினந்தனக்கு இரண்டாறெட்டிற்
றோன்றிடவேதோன்றிடுஞ்சேய் துணைப்பெண்ணெல்லாந்
தாலமதில்நாசமெனக் கணிதவாய்மை
சாற்றினர்களோர் துணைவர் வளருமாதே. (ககக)

மந்தனுடன்கொடும்பவர்க ளிலாபந்தன்னில்
வந்திடவேஅதற்குடையோன் மாந்திபானும்
விந்தையுடனுயிர்தனக்கு மூன்றின்கோளன்
விளங்குமிக்கோளோர்மனையா விக்கொன்பானில்
வந்திடவேஅதற்குடையோன் புகரின்வீட்டில்
வாய்த்திடத்தோன்றிடுஞ்சேய்க்குத்துணைப்பெண்ணெல்
சிந்தையுடன்நாசமெனக் கணிதமாய்ந்தோர் [லாஞ்
செப்பினர்கள் தப்பாது தரணிமீதே. (உ00)

## வேறு.

சூரியன்மூன்றேறுகித் தொல்புகருடனேகூடிப்
பாருயிரதனிற்சேரப் பகலவன்தனக்கிராறிற்
கூரியபதினொன்கோளன் குறுகிடப்பன்னோன்மூன்றிற்
சீருடன்சுபர்கள்சேரச் செப்பினர்துணைவரோதே. (உ0க)

ஓதிடுந்துணைவரஞ்சா யுரைத்தனர்மா நிரண்டாய்
நீதியாய்வருமென்றேதி நிட்சயமுரைக்கலாகும்
வேதமாய்ப்பன்னோன்மூன்றில் விளங்கிடஞ்சுத்தமானல்
சேதமாந்துணைமாதெல்லாஞ் செத்திடுந்தனக்குமுந்தி. (உ0உ)

சந்திரன்புதல்வன்பொன்னுஞ் சாரிடம்பன்னோன்றன்னில்
வந்திடவக்கோள்நீசம் வளர்ந்திடமறைவதாகில்
விந்தையாய்மூன்றேனாட்சி விளங்கிடப்பிறந்தசேய்க்குச்
சிந்தையாய்த்துணைவர்நாசஞ் செப்பினரேகஞ்சேயாம். (உ0௩)

## வேறு.

மாந்தியுடனிலாபக்கோ ளலரியொன்றாய்
வருமிடங்கேந்திரமாகிப் பவர்கள்வீடாய்ச்
சேர்ந்துயிர்க்குமூன்றுங்கோள் மறைந்தேவுச்சஞ்
சேரவவருடன்பவர்கள் சுபர்களொன்றாய்ச்

சார்ந்திடுஞ்சேயவன்றனக்குத் துணைவரேழு
தப்பியபெண்ணஞ்செனவே வுடன்வந்தெய்தும்
மாந்தியுடன்பன்னோன்கோ ளலரியொன்றாய்
வருமுயிர்க்கெட்டாறுபதி னொன்றில்வந்தால். (௨0௪)

வந்திடவேசுபர்வீடாய்த் தனிக்கமூன்றோன்
வக்கிரனம்புலியுடனே வுதயமேறச்
சிந்தையுடன்றோன்றியசே யேகமாகச்
செப்பினர்கள்கணிதமொழிப் படியென்றோது
விந்தையுடன்மூன்றாங்கோள் குமுதநண்பன்
விளங்குமிக்கோள்பன்னோன்கோ ளலரிமாந்தி
வந்திடவேபதினொன்றிற் றரிக்குமானால்
வருந்துணைவர்நாலிரண்டு மாதெட்டாமே. (௨0௫)

சந்திரன்பாம்புடன்குளிகன் பன்னோன்றன்னில்
தரித்திடவேஅதற்குடையோன் பவர்களோடு
வந்திடுஞ்சேய்வீடதுவாய்த் தரிக்கவக்கோள்
வரும்பரிமானுடன்கூடி யுயிர்க்குமூன்றில்
விந்தையுடன்தரித்திடும்பெண் ணுடன்வந்தெய்தும்
விளங்கியவாணிரண்டோடு பெண்தானொன்று
சிந்தையுடனேவரினு மப்பெண்ணொன்று
செத்திடுமென்றோதினர்கள் தனக்குமுந்தி. (௨0௬)

மதியுயிர்க்குப்பன்னோன்கோ ளாட்சியுச்சம்
வளரவவருடன்சுபர்கள் வசிக்குமானால்
விதியுடனேவுயிர்தனக்கு மூன்றோனுச்சம்
விளங்கிடவேவுடன்சுபர்கள் தரிக்குமாகில்
சதிருடனேபதியதனி லுதிக்குஞ்சேய்க்குச்
சார்ந்திடும்பெண் ணுபயமாண் துணையிரண்டு
மதியுடனேவுடன்பவர்கள் சேருமானால்
மாய்ந்திடுமாணிரண்டோடு மாதிரண்டே. (௨0௭)

தினகரனுமுயிர்தனக்கு மூன்றிற்சேரச்
செப்பியதோரிவனிருக்கு மதிபனுச்சம்
புணைமணிசேருயிர்தனக்குப் பன்னோன்கோளுன்
பொருந்துமிடமாட்சியுச்சந் தரிக்கப்பாவர்

வினையுடனொன்றாகிடவே சாதகற்கு
விளங்குமெனவுடன்வளரும் துணைவரஞ்சு
முனையுளமாதிருவரென வுடன்வந்தெய்தும்
மொழிந்தனராண்நாலெனவே நாசமாதோ (௨0௮)

வேறு.

ஆறுமூன்றோனாகி யமர்ந்திடம்மறைந்தேவுச்சஞ்
சாரவருடனேசுங்கன் தரித்திடப்பவக்கோள்சேரச்
சீருடனுயிரில்மால்பான் செப்பியபதினொன்கோளும்
கூறினரொன்றாய்நிற்குங் கோதையர்பலனைச்செப்பே. ()

செப்பிய துணைவர்மாது சேர்ந்திடுமுடன்வந்தெய்தும்
முற்படிநாசமொன்று மொழிந்தனர்தரணிமாதோ
துப்பிதழாய்கேள்மூன்றோன் தொல்புகர்கேதோடொன்றாய்த்
தப்பியமூன்றிற்சேர்ந்தாற் சகோதரந்தோன்றாதன்றே. (௨௧0)

வேறு.

சுங்கனுடன்மூன்றின்கோள் புகரினில்லந்
தோன்றவலற்காறினிலே பதினொன்கோளன்
தங்கியமால்கரிபரிதி யுடனொன்றாகிச்
சாருயிர்க்குக்கேந்திரமாய் வளருமானால்
மங்கைசகோதரர தனில் மாதுநாலு
வகுத்தனராண்மூன்றெனவே கணிதமோது
துங்கமதாய்மாதிருவ ரேகஞ்சேதந்
தோன்றியவாண்சேதமெனக் கணிதஞ்செப்பே. (௨௧௧)

பதினொன்றோன்கேந்திரத்தில் நீசனோடு
பகரவர்களுபயமதி லுயிர்க்குமூன்றோன்
துதிபெறவேலக்கனக்கோள் கரியனோடு
தோன்றிடவேதோன்றியசே யுடன்வந்தெய்தும்
விதியுடனாணிரண்டெனவே உபயமாது
விளங்கிடுமேகணிதவிதிப் படியென்றோது
பதினொன்றோன்மறைந்திடவே நீசனோடு
பகரவவருடன்துணைபெண் நாசமுந்தி. (௨௧௨)

மூன்றுடையோன் சூரியனையாரலோடு
முதுமகன் தன்வீடதனிற் றரிக்கமுன்பின்
தோன்றுசுபராகிட்டேவே புகர்மானுக்குத்
தொல்லுயிர்முன்பதினென்று சுத்தமானல்
மூன்றுதுணையிரட்டியென ஆண்தானுகும்
மொழிந்தனர்மாதுடனேகம் வளருமென்றே
யீன்றிடுந்தாய்தனக்குமுந்தி யஞ்சாண்சேதம்
ஏகமெனமாதொன்று சேதமுந்தி. (உகங)

மாலவன்மூன்றுடையோனு மலரியோடு
வருமிடங்கேந்திரமாகித் தரிக்குமாகிற்
சீலமுடன்பன்னேன்கோள் மறையன்வீட்டிற்
சேரவவருடன்பவர்கள் தரியாதானல்
கோலவிழிமாதொருவ ராண்மூன்ருகுங்
குறித்தனர்மாதுடன்னவே கணிதமோது
மாலிரவிமூன்றுடையோன் மறையுமானல்
மாய்ந்திடுமோணிரண்டோடு பெண்ணுமொன்றே. ()

சூரியன்முன்மாந்தியுடன் பன்னென்கோளன்
தோன்றுயிர்க்கோரேழதனிற் றுலங்குமாகில்
பாருயிர்க்குமூன்ருங்கோ ளாரல்பொன்னும்
பகரிவர்கேந்திரமாகித் தரிக்குமானல்
கூருலகிற்ரூன்றிடுஞ்சேயுடன்வந்தெய்துங்
குறித்தனர்பெண்ணஞ்செனநால் துணைவர்நாலோன்
சூரியன்முன்மாந்தியுடன் பதினென்கோளன்
தோன்றிடமூன்றெட்டுபதி னென்றுவந்தால். (உகரு)

வந்திடவித்தானமதிற் றரிக்கவிக்கோள்
வருமதிக்குக்கேந்திரமாய் வளருமானல்
சிந்தையுடன்தோன்றிடுஞ்சே யுடன்வந்தெய்தும்
செப்பியஆண்மாதரெலாந் தனக்குமுந்தி
விந்தையுடன்நாசமெனக் கணிதமாய்ந்தோர்
விதித்தனர்களிதுதவறு தெனவென்றோது
சுந்தரமாய்ஆகமநூல் விதியாமென்று
சொல்லினர்கள்வாக்கியநூல் திரட்டிப்பார்த்தோர். ()

கரியனுமூன்றாங்கோளாய் மூன்றாறெட்டிற்
கருதியமாலுடன்சேயுந் தரிக்குமாகிற்
சரியுடனேபன்னோன்கோள் பவர்களில்லஞ்
சாரவவரிருந்திடுங்கோள் மறையுமானால்
விரிகுழல்பைந்தொடிமாதருடன்வந்தெய்தும்
விதித்தனரோராணெனவே தரணிமீதில்
வருமூன்றிற்சுத்தமதா யிருக்குமானால்
மாய்ந்திடுமாண் ஆகமநூல் வழியென்றோதே. (௨௧௭)

மந்தனுமூன்றோனாகி யாறெட்டீறில்
வளருமித்தானத்தில்வர வாரல்பானும்
விந்தையுடனொன்றாகிச் சுபர்கள்நோக்கி
விளங்குயிர்க்குப்பன்னோனும் பவர்கள்வீட்டில்
வந்திடவேபகையாகித் தனிக்குமானால்
வந்திடும்பெண் தனக்கெனவே துணைவர்மாது
சிந்தையுடன்நாசமெனக் கணிதமாய்ந்தோர்
செப்பினர்களிதுநிசமென் றோதுமென்றே. (௨௧௮)

வேறு.

குருதியுமூன்றோனாகிக் குறுகியபானோடொன்றாய்
வருமுயிர்தனக்குமூன்றில் வந்திடப்பன்னோன்கோளன்
தருமிலக்கினத்துக்கொன்பான் தானமேதனிக்குமானால்
வருவதுதுணைவர்மாது மாய்ந்திடும்ஏகஞ்செப்பே. (௨௧௯)

வேறு.

மாலவனும்பாம்புபதி னொன்றின்கோளன்
வருமிடமூன்றாறுதனிற் றரிக்குமாகிற்
சீலமுடனுயிர்மூன்றின் கோளன்றானும்
சேருமிடம்அட்டமமீ ராறிலுற்றால்
தூலமுடனேவளரு மாதுநாலு
தோன்றியஆண்மூன்றெனவே கணிதமோது
காலனாரேகுமாண் மூன்றினோடு
கருதியபெண்ணுபயமென நாசங்காட்டும். (௨௨௦)

மந்தனுமூன்றாங்கோளாய்க் கேதினோடு
வருமுயிர்க்கேழதனில்வரப் பவர்கள்நோக்கச்
சிந்தையுடன்பதினொன்றோன் மாலதாகிச்
சீதகனும்பரியுடனே கரிவீட்டேற

விந்தையிலக்கினந்தனக்கீ ராறிலாரல்
விளங்கிடவேபன்னேன்கோ ளதனைப்பொன்னன்
வந்துமதிமாந்திகரி நோக்குமானல்
வந்திடுஞ்சாதகற்குவருந் துணைவரஞ்சே. (உஉக)

அஞ்செனவேமாதிருமூன் றுடன்வந்தெய்தும்
அறையுமிந்தத்துணைமாது பெலமென்றோது
விஞ்சையுடன்லாபக்கோள் மூன்றின்கோளன்
விளங்குபுகர்தினகரன்கே துடனென்றாகித்
தஞ்சமுடனுயிர்தனக்குப் பதினொன்றாகச்
சாருமெனில்முன்னுரைத்த துணைவர்மாது
துஞ்சிடுமேதப்பாது கணிதமென்று
சொல்லினர்களாகமநூ லாய்ந்தமேலோர். (உஉஉ)

மந்தன்மனைதனிலுயிர்க்கு மூன்றின்கோளன்
மறைந்திடவேகொடியபவ ரவனைநோக்கச்
சிந்தைபதினோராங்கோள் நீசமேறிச்
சேர்ந்திடவேவுடனொருகோள் தரியாதானல்
வந்திடுஞ்சேயுடன்வரினுந் துணைநாலொன்று
வகுத்தனர்கள்மாதொருவ ளுடன்வந்தெய்தும்
விந்தைபதினோராங்கோள் மூன்றினேடு
மேவபவர்தரித்திடவே துணைப்பெண்முந்தும். (உஉந)

மந்தனுமூன்றாங்கோளாய் மூன்றிலேக
வருமதற்குமூன்றதிலே ஒருகோளேகச்
சிந்தைபதினோராங்கோள் புகரதாகித்
தினகரன்றன்னுடன்கூடி யுபயமேற
விந்தையுடன்வருங்குருதி மறைந்துநீசம்
விளங்கிடவேகொடியபவர் பதினொன்றானல்
வந்திடுஞ்சேயுடன்வரினுந் துணைநாலொன்று
மாதிருவர்தோன்றுமெனக் கணிதமோது. (உஉச)

ஓதுமெனமூன்றுதுணை மாதிரண்டு
ஒழிந்திடுமேதனக்குமுந்தி மரணஞ்செப்பு
சீதமுடன்மூன்றுடையோன் பதினொன்கோளன்
தினகரன்மால்சேய்கொடியோ னிவர்கடானும்

வேதமுடன் மூன்றலது பதினொன்றானால்
விளங்கிடுஞ்சேய்ஏகமென வளருமென்றே
சோதிடநூல்தேர்ந்தவர்கள் கணிதமொன்று
சொல்லினர்கள்மேதினியிற் சுருதிபார்த்தே. (உஉரு)

சூரியனும்பதினொன்கோ ளாகிமாலுந்
தொல்புகருங்கூடியொன்ருய்க் கரிவீடேறச்
சாருமிக்கோளிருந்திடும்வீ டதிபன்றானுஞ்
சாருயிர்க்குப்பவருடனே மறையுமாகிற்
பாருயிர்க்குமூன்றுங்கோள் பதினொன்றேகிப்
பகருமதிமாந்தியுடன் தரிக்குமானல்
கூருயிரில்வருங்குருதி தனிக்கவந்த
குறுகியசேயுடன்வரினுந் துணைவர்செப்பே. (உஉசா)

செப்புமெனநாலுதுணை மாதுநாலு
சேர்ந்திடுமேதப்பாது கணிதவாய்மை
தப்பியதோர்பன்னேன்கோ ளதனைக்காரி
சாரும்விழிப்பார்வையினல் நோக்குமானல்
முற்படியேவுடன்வரினுந் துணைவர்மாது
மொழிந்தனர்கள்நாசமெனக் கணிதமாகத்
துப்பிதழாய்ஏகமதாய்த் தனிப்பனென்று
சொல்லினர்களாகமநூல் துறந்தமேலோர். (உஉஎ)

மாதேகேள்வருமுயிர்க்குப் பன்னேன்றன்னில்
வருங்கொடியோன்தனித்திடவே பதினொன்கோளன்
சீதமுடன்புகராகிப் பரிமாலோடு
சேருயிர்க்கீராறலது வுபயமாக
வேதமுடன்வருங்கரியன் மூன்றின்கோளாய்
விளங்குயிருக்கட்டமமா யலதுமூன்றில்
ஓதுமெனப்புகர்மனையிற் குருதியேகில்
ஓத்துயிர்க்குமறைந்திடவே உடன்வந்தெய்தும். (உஉஅ)

வந்திடவேயேழுதுணை மாதொன்ருக
வகுத்தனர்கள்வெகுபெலமாய்த் திரட்டிப்பார்த்துச்
சிந்தையுடன்மூன்றுதுணை வரும்பெண்ணென்று
செத்திடுமேசர்ப்பமதாற் றரணிமீது

விந்தையுடன்மூன்றுடையோன் வியத்திலேகி
விளங்குபதினோராங்கோ ளுடன்வந்துற்றால்
சுந்தரமாயேகமெனத் தழைப்பானென்று
சொல்லினர்கள் கணிததமி ழாய்ந்தமேலோர். (உஉகூ)

சந்திரனும்பதினொன்கோ ளாகியேகுஞ்
சாருமிடம்பவர்மனையாய்க் கரிகேதோடு
வந்துயிர்க்குமறையாமற் றரிக்கமுன்பின்
வளருமிடம்பவர்வீடா யிருக்குமானால்
சிந்தையுடன்மூன்றுங்கோள் பகைநீசத்திற்
சேர்ந்திடவேதோன்றியசேய் துணைமாதெல்லாம்
விந்தையுடன் தனக்குமுந்தி நாசமென்று
விதித்தனர்களாகமசாஸ் திரத்தின்நூலால். (உ௩0)

சூரியனும்பதினொன்கோ ளாகியேகுந்
தோன்றுமிடமறைந்திடவே அதற்குநாதன்
பாருயிர்க்குமூன்றோனுச் சுபர்களோடு
பானுவுக்குக்கருமமல தொன்பதாகக்
கூறுமெனவருங்குருதி அருணனோடு
குறுகுமிடம்பவர்வீடாய்த் தரிக்கமூன்றில்
சீருடனேமாந்திவரத் தோன்றுஞ்சேய்க்குச்
செப்பினர்களுடன் துணைவர் தொகையைச்சொல்லே. ()

சொல்லுமாணஞ்சு துணை பெண்ணுமஞ்சு
தோன்றிடுமேதப்பாது கணிதமாகச்
செல்லுமெனமூன்றுதுணை மாதுமூன்று
செத்திடுமேதனக்குமுந்தி நாசங்காட்டும்
வெல்லுமெனமூன்றுங்கோள் பதினொன்கோளும்
விளங்குயிர்க்குக்கேந்திரமாய் வளருமானற்
சொல்லுமெனஏகமதா யுதிப்பனென்று
சொல்லினர்கள்சோதிடநூற் படியென்றோதே. (உ௩உ)

சுங்கனுமூன்றுங்கோளா யுதயமேறித்
தோன்றுமுயிர்க்கோளுடனே தரிக்குமாகிற்
சங்கை திநோராங்கோள் மாலதாகிச்
சனியுடனேசேயனுமே வுபயஞ்சேர்ந்தால்

தங்குமெனத்தோன்றியசே யுடன்வந்தெய்தும்
தன்துணைவர்நாலொன்று மாதிரண்டு
பங்கமுடன்நாலுதுணை மாதிரண்டு
பாழ்படுமேதனக்குமுந்தி நாசமோது. (உ௩௩)

பதினொன்கோள்மாலோனைப் நீசமேறிப்
பகருயிர்க்குமூன்றாங்கோள் கொடியனோடு
சதிருடனேவுயிர்தனக்கு வியத்திலாதல்
சாருமொன்பான்தானமதாய்த் தரிக்குமாகில்
விதியிலக்கினந்தனக்கு மூன்றிற்பாம்பு
விளங்கிடவேதோன்றியசே யுடன்வந்தெய்தும்
அதிபதியாய்மாதிருவர் வரினுமொன்று
அறைந்தனர்கள் தப்பாதே கணிதநூலோர். (உ௩௪)

சனியுயிர்க்குமூன்றோனா யாட்சியேறித்
தனித்திடவேசுபர்நோக்கா தாகுமாகிற்
புனிதமுடன்பதினொன்கோள் புகாதாகிப்
புந்திபரியுடன்கூடி யுபயமேற
இனிதுடனேவருங்குருதி யாறெட்டாகி
யிருந்திடவேயெக்கோட்கள் சேராதானால்
கனிவுடனேதோன்றியசே யுடன்வந்தெய்துங்
காரிகையும்மூன்றுபய துணையென்றோதே. (உ௩௫)

ஓதுமெனவுயிர்தனக்கு மூன்றின்மூன்றில்
உற்றவக்கோள் தனித்திடவே சுபர்நோக்குற்றால்
நீதமுடனாண்மூன்று பெண்தானொன்று
நிச்சயமாய்நாசமெனத் திரட்டியோது
சீதமுடன்மூன்றினுக்கு மூன்றைப்பாவர்
சேரும்விழிப்பார்வையினால் நோக்குமானாற்
சேதமெனவுடன்வரினு மங்கையொன்று
செத்திடுமேதனக்குமுந்தி நாசங்காட்டும். (உ௩௬)

பதினொன்கோள்மறையோனைப் நீசமேறிப்
பகருயிர்க்குமூன்றாங்கோள் கொடியனோடு
சதிருடனேவுயிர்தனக்கு மறையாதாகித்
தரித்திடவேசுபர்நோக்கா தாகுமாகில்

விதியுடனேவருங்கரியன் மறைந்தேஆட்சி
விளங்கிடவேவுடனொருகோள் வரினுமானால்
அதிபதியாயுடன்வரினு முபயமாது
அழிந்திடுமேவோர்மாது தனக்குமுந்தி. (உ௲எ)

வருமுயிர்க்கும்மூன்றதனிற் கொடியோனேக
வளருயிர்க்குமூன்றுங்கோள் கரியனுகித்
தருமாவிக்கட்டமத்திற் பரியோடொன்றாய்த்
தரித்திடவேபதினொன்கோள் மறையுமானல்
அருமறைநூற்படிவிதியா லுடன்வந்தெய்தும்
அறைந்தனர்களுபயதுணை மாதுமொன்று
குறுகிடுமேதப்பாம லுபயமாது
குறித்தனர்கள்கணிதமொழிப் படியால்நூலோர். ()

ஆரலுடன்மாந்தியொன்றாய்ப் பருதியோடு
அமர்ந்திடவேஅதற்குடையோன் கரியனுகிப்
பாருயிர்க்குமூன்றதனிற் றனிக்கமூன்றுன்
பகருமனைக்கேழாகி மதிபாம்பொன்றாய்ச்
சாருயிர்க்குக்கருமமது உயிரிலானுற்
சார்ந்திடுஞ்சேயுடன்வரினுந் துணைப்பெண்நாசம்
சீருடனேயேகமெனத் தனிப்பனென்று
செப்பினர்களாகமநூல் தேர்ந்தநூலோர். (உ௲௯)

காதலியேமூன்றதனுக் குடையகோளன்
கருதியபாவருமாகிச் சுபரோடேகில்
வேதனதிற்றரித்திடினு மத்தானத்தோன்
விளங்கியபாவருமாகி யவர்முன்பின்னுல்
தீதவர்களிருந்திடவுஞ் சுபர்கள்சேர்ந்தால்
தேளாடுமிதுனதுலை தோன்றினோர்க்கு
ஆதரவாய்த்துணைவர்களு மாறேழெட்டு
அமருமதில்மரணம்போக்கிருப்பைச்சொல்லே. (உ௲0)

சொல்லுசகோதரமரண காலமுன்னுற்
றேன்றுபயமாதுடனே யேகமாது
அல்லலிலாதிருக்குமெனப் பவத்தானத்தி
லதிபாம்புகூடிடவு மத்தானத்தோன்

மெல்லிநல்லாயட்டமத்தோன் வீரியத்தில்
விளங்குமுன்போலில்லதனிற் ரேன்றுவாரால்
கொல்லுமேபவன்றுணேவ ரெவருற்றுலுங்
கோளரிமுன்மதயானேக் கூட்டம்போலாம். (உசக)

ஒருமூன்ரேன்சுபராகச் சூரியன்காலெய்த
ஒருமூன்றில்மூன்ரேனு மறைந்திடுவனுகில்
வருதுணேவர்நாசமென்ப ரதிற்புகர்மால்குருவும்
வந்திடுகிலானுபய மாதுமூன்ருகும்
தருதுணேவராமெனவவ் வணமலதுமரணஞ்
சாற்றிடலாந்தன்முன்ன லாண்துணேவிறக்கும்
திருவருளாலெனதுகுரு தேசிகனுமுரைத்தார்
தேர்ந்ததனேத்தமிழதனுற் றெரியவுரைத்தனனே. ()

அரவுகரிசூரியன்மூன் றிருக்கத்தானக்கோள்
அவனுயிர்க்குமறைந்திடுகிற் சேய்துணேவுமெல்லாம்
பருதிகண்டவிருள துபோ லென்றுரைக்கலாகும்
பலமாகவிருந்தாலு மேகதுணேயெய்தும்
கருவயதீராறினுக்கு ளத்துணேவிறக்குங்
காசினியிலறுபதுக்கு அவனிருப்பனென்றே
புருவசிலேதனேப்பழிக்கு மடமானேகேளாய்
பொங்குகடற்சூழுலகந் தனிலறைவாய்மானே. (உசங)

வேறு

வெள்ளிமூன்றதனிற் றரித்திடவரினும் வெள்ளியொன் பவனுமேயாகில், தெள்ளியபருதி சேர்ந்திடிலஞ்சோன் செப்புயிர் மறைந்திடுஞ்சேய்க்கு, அள்ளியதுணேவ ராறிருந்தாலு மனேத்துமே நாசமாய்ப்போகும், விள்ளுமித்தானத் தொருசுபரிருக்கில் விளங்கியதுணேவ ரொன்றுமால். (உசச)

ஆமவன்றனக்கு முன்னதாலிறக்கு மலதவன்பின்னரையாண்டாஞ், சேமமாமூன்றிற் குருவிருந்திடுமால் செப்புமம்மூன்றினில்மூன்றில், சாமனுமிருக்கிற் சுபர்களில்லாதால் தன்னுயிரான்மறையாலுஞ், சாமசாஸ்திரத்தா லுரைத்தனர்மேலோர் தந்துணே யஞ்செனவுரையே. (உசரு)

வேறு.

சொல்லுமூன் றுடையநாதன் சூரியன்மறைவதாகி
வல்லியேமாந்தியுற்றே வந்திடக்காரிமூன்றில்
இல்லொருதுணையில்லாது ஏங்கியேயிறக்குமென்பார்
சொல்துணையதனுற்றுன்பந் தொகுத்திடுந்தனக்குமுன்போம்.()

துணையின்கோளாரலாகத் தோன்றியமதியோடெய்தால்
இணைசுபமாகினுலு மிவனுயிர்க்கைந்தோன்வீடால்
பணைசுபர்பாம்போடேகிப் பதிங்கிலோரேகமாகுந்
துணையிவன்றன்னோடேகந் தோன்றிடுந்துடியின்மன்னாய். ()

வேறு.

சூரியன்மூன்றி லிருந்திடவந்தத் துணைவர்தானட்ட மத்துடையோன், சூரியனுடனே யிருந்திடவேறு சுபரதிலேயிருந்தாலும், சூரியன்கண்ட பனியதுபோலத் தோயுமாஞ்சோதரரெல்லாம், சூரி[illegible]றனைப்போற் சாதகனொருவன் துணையிலாதிருந்து மூ[illegible] (உசஅ)

வேறு.

[illegible]மூன் றுமறுமூன் றும் பாவராக
ஒருமூன்றோன்சுபராகப் பாம்போடேக
வருமூன்றில்மூன்றோனுந் தனிப்பானாகில்
வாய்மையுளசோதரர்கள் நாசஞ்சொல்லு
இருமூன்றில்மூன்றோன்சே ரிடம்நட்பானால்
இயல்வனமுன்பின்சுத்த மிருந்திட்டாலும்
வரும்பலன்முன்போலாகு மென்றுமேலாய்
வகுத்திடுமூன் றினுக்கு மூன்றுந்தானம். (உசக)

வேறு.

துணையினிலிருந்தகோட்கள் தொகுத்துச்சமாகுமானால்
இணையுறுபவருற்றாலு மிருந்திடாதன்சென்மம்
அணைமறைந்திடுவனாகி லவன்றுணை தீர்க்கமாகுந்
துணையினைப்பிரிந்துவாழ்வன் துணையினற்பகையுண்டாமே. ()

வேறு.

வருந்திக்கிதிகையில் மதியுடன்பாம்பு வந்திடத்திரிதிகைக்குடையோன், பருதிதன்காலி லிருந்திடவேறு பதிசுபரேகிடிற்ற

ணிக்கக், கருவுடனென்பான் றுணைவரோடிருப்பான் காலனூர் புகுந்ததுபோகச், சுருதியாயேக மாதுடனிரண்டு துணைவரும்பு ருடராய்த் தொகுப்பார். (௨௫௧)

மூன்றினேனசுபராய் மூன்றினில்மூன்றோன் முதுசுபராயி ருந்தாலும், தோன்றியவுயிரோன் பாவராகிடினுந் துணையுயிர்க் குடையவன்மறைய, ஆன்றிடுந்துணைவர் சதுரமதாகு மவனியி விறப்பதுபோக, ஈன்றெருமாதோ டாடவர்மூன்று மிருந்திடுமெ ன்றனரியல்பாய். (௨௫௨)

மூன்றின்கோள்மதியா யிரண்டின்கோளுடனே முக்கியபுக ரிருந்திடினுஞ், சான்றநற்சேய்க்கு லாபமேகுசனுந் தரணிதன்வீ ட்டினிற்குருவும், ஆன்றிடுங்கருமன் கேதுடன்நாலி லமர்ந்திட விரவியுமுயிரிற், றோன்றிடப்பிறந்த சாதகன்றனக்குத் துணைவ ருமூன்றென மொழிந்தார். (௨௫௩)

மொழிந்தனர்பெரியோ ராவிக்கீராறில் முனிவனுமாந்தியுந் தரிக்கில், அழிந்திடுந்துணைவர் பெண்ணுமேதீர்க்க மாறிரண் டொன்றிலேவிதவை, கழிந்திடுமொன்று நாலுதிங்களிலே காரி யுமுயிரை நோக்குற்றால், மொழிந்தனர்குருவிற் சோதரநாசம் மோசமாய்ப்போய் விடுமென்றார். (௨௫௪)

மதிமகன்சேயும் அரவமுமருக்கன் வளர்பகையாட்சியாயி ருந்தால், சதிருடனிருப்பன் தனக்குமுன்பிறந்தோன் தரணியி லிருப்பதுநாசம், விதிமுறையாலே கணிதநூலுரைத்தார் வித் தைகளற்பம தாகும், அதிகமாமுப்பத் திரண்டதன்மேலே அவ னுடயோகமே வுரைத்தார். (௨௫௫)

வேறு.

மந்தனுஞ்சேய்வீடேக வக்கிரன்தன்வீடாகச்
சிந்தையாய்மதியுமந்தன் சேயுடன்வீட்டிற்சேர்ந்தால்
முந்தவேமறந்தார்நாசம் முன்பினும்பெலமிலாதால்
வந்தவன்றானும்வாழ்வன் வருந்துணையொன்றுவாழும். (௨௫௬)

வேறு.

சந்திரன்குருதி யிறையவன்பொன்னேன் சாருயிர்மூன்றின் கோளுடனே, வந்திலக்கினத்துக் காறெட்டுமூன்றில் மறைந்தி டச்சுபமிலாதிடுகில், விந்தையாய்த்தோன்றுஞ் சாதகன்றனக்கு

விதித்தனர் மூன்றிருதுணையாந், தந்திடுமிறைவன் மூன்றினோன் பன்னோன் சாரிடங்காரிவீடுற்றால். (௨௫௭)

உற்றிடுஞ்சேய்க்கு வந்திடுந்துணைவருயர்வுடன்நாசமென் றுரையே, சத்தியத்துடனே கணிதநூல்விதியாற் சாற்றினார்மே லவர்மொழியால், சித்தியாங்குருவுமுயிர்க்குமூன்றேனுஞ் சேரி டமுதயம்வந்துற்றால், ஒத்திடுந்துணைவர் வெகுதிறமாக வுலகி னில்மூன்றிருந்திடுமே. (௨.௫௮)

வேறு

சூரியன்பன்னோனென்றாய்த் தோன்றிடமால்வீடேகக்
காரிசேய்புகர்கேதோடு கருகிடமுயிர்மூன்றுற்றால்
கூறிடுஞ்சாதகற்குக் குறித்தனர்துணைப்பெண்நாசம்
ஆரியனணையாக வறைந்தனர்தரணிமீதே. (௨௫௯)

வேறு.

மதியுடன்பருதி புகருடன்லாபம் வந்திடச்சேயிரண்டா கில், விதியுடன்குருவும் பாவனையெட்டில் விளங்கிடச்சேயையும் பார்த்தால், துதிபெருந்துணையிற் புருடர்நாலாகத் தோன்றிடு மாதுமூன்றுடனே, கெதிபெறவிருப்பன் பூமியுந்தனமுங் கீர்த் தியும்வல்லபமுண்டே. (௨௬0)

வேறு.

கும்பலக்கினமேதோன்றக் குருவுடன்பாவர்சேர
அம்புலிமாந்தியோடு அரிவையிலிருப்பதானால்
நம்பியரவற்குநாலு நங்கையரொன்றேயாகும்
எம்பியரிரண்டேயாக வியம்பினர்கணிதநூலோர். (௨௬௧)

கரியவன்கேதுமாகக் கதிர்புகர்மால்வீடேகப்
பரியவனில்லந்தன்னிற் பார்க்கவன்மதிபொன்னால்
சரியுடனிருப்பதானாற் றரணியிலுதிக்குஞ்சேய்க்குத்
துரிதமாய்த்துணைவர்நாசந் துணிவுடன்கன்னியொன்றாம். ()

மதியுமேமூன்றிற்சேர வக்கிரன்மறையமந்தன்
விதியுடனட்டமத்தில் மேவிடவருவதானால்
பதிதனிற்பிறக்குஞ்சேய்க்குப் பகர்ந்தனர்துணைவர்நாசஞ்
சதியுடனேகமாகத் தரணியிலிருப்பன்மாதோ. (௨௬௩)

குருதியும்புகர்வீடேகக் கொடியவன்கரியனோடு
வருநிதிதனத்திலேக மழைக்கோளன்மந்தன்வீட்டிற்
சுருதியாயிவர்கடன்னைத் துணிவுடன்சுபர்கள்பார்த்தால்
வருமுயிர்த்துணைகளற்பம் மதித்தனரிரண்டுவாழும். (௨௬௪)

வேறு.

மூன்றினிலிரவி யிருந்திடச்செவ்வாய் முக்கியமாந்தியோ டுயிரிற், றோன்றிடநாலோன் கருமனுந்தனத்தோன் சொல்லிய கேதுடன்வரினும், ஆன்றநற்பெண்ணு மாணுமஞ்சதனி லழிந் திடுமிரண்டுமேபிலமாய், மூன்றளவாணும் பெண்ணுமேயென்று முடித்தனர் பெரியவர்தாமே. (௨௬௫)

வேறு.

மானுயிர்க்குப்பதினோராங் கோள்தாக
வருமனையுங்கேந்திரமாய்ப் பவர்கள்வீடாய்ச்
சீலமுளஜீவனுக்கு மூன்றிற்பாம்பு
சேர்ந்திடவேமூன்றுடையோன் மறைவீடுற்றால்
சாலவெனவருந்துணைவ ருபயமேகஞ்
சார்ந்திடுமேமாதிரண்டு தோன்றுமென்றே
தூலமெனவுடன்வரினுந் துணைவர்மாது
துஞ்சிடுமேபாம்புவருந் தோஷத்தாலே. (௨௬௬)

வேறு.

மாதுருதானத்தோனும் வருமூன்றுடையகோளும்
ஆதித்தனுடனேகூடி யணுகிடப்புகரோடேகில்
வாதிக்குஞ்சோதரங்கள் வந்துடன்சேதமாகும்
பேதிக்குந்துணைவியொன்று பெலமெனச்செப்பலாமே. (௨௬௭)

**சகோதரபாவகம் முற்றிற்று.**